# குழந்தையின்பம்

கவியோகி மஹரிஷி
சுத்தானந்த பாரதியார்

Published BY Shuddhananda Library,
Thiruvanmiyur, Chennai 600 041.
Ph: 97911 77741

Copy Right : @Shuddhananda Yoga Samaj(Regd),
Shuddhananda Nagar, Sivaganga - 630 551

# குழந்தையின்பம்

*செல்வத்துட் செல்வம்*
*சேய்ச் செல்வம்; அச்செல்வம்*
*செல்வத்துள் எல்லாம் சிறப்பு*
*சேயும் தாயும் தேயச் செல்வம்*

*சேயே வீடு; சேயே நாடு; சேயே உலகம்; சேயே உலகின் உயிர் நிலை. ஆதலால் சேய் வளர்ப்பு உலக வாழ்வில் முதன்மை பெறுகிறது. ஜப்பான், சுசர்லாந்து, ரஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகளில் சேய் வளர்ச்சிக்கு, எவ்வளவோ அரிய ஏற்பாடுகள் உண்டு. தாய்மாருக்கு ஒவ்வொரு நாடும் முதற் பெருமை தருகிறது. சேய்களுக்கென்றே தோட்டம், ஆட்டம், ஆசிரியர், விளையாட்டுச் சாமான்கள், நூல்கள், பாடல்கள், படங்கள், திரைச் சுருள்கள் அந்த நாடுகளில் அதிகமாக உள்ளன.*

*குழந்தைகளின் உள்ளத்தை உயர்த்தி, ஒழுக்கத்தை வளர்க்கவே குழந்தையின்பம் எழுந்தது. இப் பாடல்களைப் பாடி கவியோகி ஏராளமான குழந்தைகளை வளர்த்துள்ளார். சாதிமதபேத மின்றி ஆன்மப் பொதுவான சமயோகத்தில் எல்லாரும் வாழவேண்டும். நம் நாட்டுக் குழந்தைகள் வீர தீர சூரராக வேண்டும் என்ற கருத்துடன் இப்பாடல்கள் மீண்டும் அச்சிடப்பட்டுள்ளன. உலகம் எங்கள் எளிய விருந்தை ஏற்றுக் குழந்தைகளுக்கு ஊட்ட வேண்டுகிறோம். சேய்களை வளர்க்கும் தாய் மனங்கொண்ட ஆசிரியருக்கு இந்நூலை அர்ப்பணிக் கிறோம்.*

*இக் குழந்தை வளர்ச்சிப் பாடல்கள் அபிநயத்துடன் பாடி ஆடத்தக்கவை. மோகனம், பேகாக், புன்னாகவராளி, சங்கராபரணம், ஆரபி, காம்போதி, தேஷ், காபி ஆகிய ராகங்களில் ஆதி, ரூபகம், ஜம்பை, திசிர ஏக தாளங்கள் இணைத்து இப் பாடல்களைத் தெளிவாகப் பாடுக; இப்பாடல் களுக்கேற்ற சித்திரங்களை வரைந்து, விளக்கிப் பிறகு வரி வரியாகப் பாடி விளக்குக.*

*இந்தப் பதிப்பும் வடலூர் சமயோகத்திரு இராஜம்மா—இராஜகோபாலன் அவர்களின் தவப் புதல்வனான ஆத்மாராமனின் குழந்தை பிறந்த நன்னாள் மலராக வெளிவருகிறது. இதற்கு முன் பதிப்பும் வடலூர் பாலு குடும்பத்தார் மற்றும் இராஜ—இராஜகோபாலன் குழந்தைகளின் நன்னாள் மலராகவே வெளிவந்தது அதிசயமே! இந்த இனிய அன்பர் யோகசித்தி—பாரத சக்தி வழியே நடந்து வரும் நல்லார். இவர்கள் அனைவரும் நிறைநாட் செல்வர்களாக அறிவும், திருவும், அருட்பொலிவும் எய்தி வாழ சுத்தானந்த பரமாத்மன் அருள் புரிவாராகுக!*

**சுத்தானந்த நூலகம்**

## 1. குழந்தைக் கடவுள்

*குழந்தைக் கடவுளைக் கும்பிடுவோம்*
*குவலய வுயிரென நம்பிடுவோம்*
*அழகழகான அன்புக் குழந்தை*
*ஆசைக் குழந்தை வாழியவே*
*குழந்தை யின்பக் கோயிலென்போம்*
*குலநலம் வாழுந் தாயிலென் போம்*
*குழலும் யாழும் தமிழும் போலக்*
*கொஞ்சும் பிஞ்சுக் கிளிமொழியே;*
*பழகப் பழகப் பாலொடு தேனாம்*
*பாலர் இன்பம் பருகிடுவோம்*
*பருகிப் பரிவால் உருகிடுவோம்.*

## 2. சின்னப் பாப்பா

*சின்னச் சின்னப் பாப்பா சிங்காரப் பாப்பா*
*அன்னப் பட்சி போலே ஆடிவரும் பாப்பா*
*வன்னக்கிளி போலே வார்த்தை சொல்லும் பாப்பா*
*புன்னகைசெய் யின்பம் பொங்கிவரும் பாப்பா!*
*வீடு வாழ வந்த வேல் முருகப் பாப்பா*
*நாடு வாழ வந்த ஞானக் கண்ணே பாப்பா*
*கொஞ்சி வரும் வீட்டில் கூடிவரும் திருவே*
*நெஞ்சையள்ளும் அமுதே நீடு வாழி பாப்பா!*

## 3. குஞ்சுப் பாப்பா

*குஞ்சுப் பாப்பா.......நல்ல நெஞ்சப் பாப்பா.......வாவா*
*கொஞ்சிக் குலாவிடுவோம் பிஞ்சுப் பாப்பா*
*தங்கப் பாப்பா.......வீரச் சிங்கப் பாப்பா*
*மங்கல மலர்நகை பொங்கும் பாப்பா*
*முத்துப் பாப்பா.......உன்மேல்*
*பித்துக் கொண்டேன்.......சுத்த*
*சக்திப் பாப்பா.......மிக சாந்தப் பாப்பா*
*கண்ணப் பாப்பா.......மணி வண்ணப் பாப்பா.......*
*எண்ண எண்ண இனித்திடும் இன்பப் பாப்பா.*

## 4. நானுங் குழந்தை !

*நானுங் குழந்தை....... கண்ணா நீயுங் குழந்தை*
*வானுங் குழந்தை....... இந்த மாநிலங் குழந்தை*
*கொஞ்சுங் குழந்தை....... நீ குட்டியுலகம்*
*வஞ்சமில்லாத.......திரு வாசகத்தேனே*
*பிடி பிடி என்னை.......உன் பிஞ்சுக் கரத்தால்*
*மடியிலுட்காரு.......இன்ப வானச் சுகமே*
*வன்ன மலரால்.......உன் வடிவணி செய்வேன்*
*புன்னகைச் சொக்கே.......கண்ணே*
*பொலிக நின் வாழ்வே !*

## 5. கிழக்கு வெளுத்தது

*கிழக்கு வெளுத்தது கிளிகள் அழைத்தன*
*மளக்கென் றெழுந்திரு.......பாப்பா*
*மழலை யமுதமே பாப்பா*
*காக்கையும் குருவியும் கதை சொல்லுகின்றன*
*கேட்க நீ ஓடிவா.......பாப்பா*
*கேட்டொரு கதை சொல்லு பாப்பா*
*தோப்பு வனமெல்லாம் சுகமான வாசனை*
*பூப்பறித் தாடுவோம்.......பாப்பா*
*பொன்வண் டழைத்தது பாப்பா*
*இன்ப வுலகத்தில் எல்லாரும் எல்லார்க்கும்*
*அன்புடன் வாழுவோம் பாப்பா*
*அதுபொது வேதமாம் பாப்பா !*

## 6. முத்துப்பல்

*முத்துப்பல் விளக்கிடு முகத்தைக் கழுவிடு*
*சுத்தம் சுகந்தரும் ....... பாப்பா*
*சுறு சுறுப்பாயிரு ....... பாப்பா*
*சூரியன் உதித்தது சொக்கத் தங்கம் போலே*
*காரியங் கருதுவோம் பாப்பா*
*காலத்தைப் பொன் செய்வோம் பாப்பா*
*குளத்திலே அன்னம் போல் குளித்து மடிகட்டி*
*உளத்திலே ஓம் என ஜபிப்போம்*
*உண்மைக் கடவுளைத் துதிப்போம்*
*பாருல கத்திலே பரம்பொருள் எங்குமே*
*ஆருயி ரானது பாப்பா*
*அன்பினால் வணங்குவோம் பாப்பா.*

## 7. கடவுள் வணக்கம்

*எல்லாருக்கும் பொதுவாகும்*
*இறைவா பரமா ஓம் வணக்கம்*
*எல்லா உயிர்க்கும் உயிரான*
*இறைவா ஒருவா ஓம் வணக்கம்*
*அன்பே யாகும் பரம்பொருளே*
*அன்பால் உன்னைப் போற்றுகிறோம்*
*இன்பே யான பரம்பொருளே*
*என்றும் இன்பம் ஈவாயே !*
*அறிவே யான பரம்பொருளே*

*அறிவின் வளமை அருள்வாயே*
*அறமும் தொண்டும் கொண்டுலகில்*
*ஆளாய் வாழ அருள்வாயே*
*நல்ல சொல்லும் நல்லுணர்வும்*
*நல்ல தொழிலும் நன்னினைவும்*
*எல்லாருக்கும் ஈவாயே*
*எங்கும் பொங்கும் இயலொளியே.*

## 8. கோலப் பாட்டு

*கூட்டி மெழுகிக் கோலம் போட்டு*
*வீட்டை அழகு செய்வோம்!.......நம்*
*வீதி யழகு செய்வோம் !*
*கொலுசும் வளையுங் குலுங்கக் குலுங்க*
*நலங்குக் கோலம் வைப்போம்.......உயிர்*
*நாதனை வர வேற்போம் !*
*மாக் கோலத்தால் மலருங் கனியும்*
*ஆக்குவோமடி தோழி.......அதில்*
*ஆப்பூ வைத்து மகிழ்வோம்*
*அழகு செய்யும் அமுதக் கலையைப்*
*பழகப் பழக நலமாம்.......அதைப்*
*பார்க்கப் பார்க்க மகிழ்வாம்*
*பளபளக்க மினுமினுக்கப்*
*பாத்திரங்களைத் தேய்ப்போம்*
*தளதளக்கத் தங்க மேனி*
*தனியழகு செய்வோம் !*

## 9. ஓடி வா

*ஓடிவாடா கண்ணே ....... ஓடிவாடா*
*உள்ளஞ் சிலிர்க்கச் சிரித் தோடிவா*
*ஆடிவாடா அமுதே ....... ஆடிவாடா*
*ஆனந்த மயில் போலே ஆடிவாடா*
*புள்ளி மானைப்போல் விரைவாய்த் துள்ளிவாடா*
*மெல்ல மெல்ல வந்தென் அன்பைக் கொள்ளவாடா*
*கற்கண்டும் கனிரசமும் போலவே*
*கட்டிப் பாலுந் தேனமுதும் போலவே*
*சொற்கண்டு மனங்குளிர ஓடிவா*
*சுடர்வேல் முருகன் போல ஓடிவா !*

## 10. பொன்னிளங்காலை

*பொன்னிளங் காலையுன் வண்ணமே.......அதிற்*
*பூத்திடுஞ் செங்கதிர் உன்முகம்*
*மின்னலிற் கோத்தமுத் துன்னகை.......கண்ணா*
*மெல்லிய ரோஜாப்பூ வுன்னிதழ் !*
*வண்டுமொய் வெண்மலர் உன்விழி.......சுருள்*
*மாமழை மேகமுன் குஞ்சியே !*
*செண்டுசெய் அல்லியுன் மென்கரம்.......வெற்றிச்*
*சீதேவி வாசமுன் மார்படா !*
*கொஞ்சும் பசுங்கிளி யுன்மொழி.......இசை*
*கொட்டுங் குழலதைப் போலுமோ ?*
*செஞ்சரண் அன்னமுன் சேவடி.......என்*
*சிந்தைக் கமுதமுன் செவ்வியே !*
*கட்டிக் கரும்புங் கனிகளும்.......பாலைக்*
*காய்ச்சித் திரட்டிய பாகுமுன்*
*தொட்டிலை யாட்டுமின் பாகுமோ.......உன்னைத்*
*தொட்டணை யுஞ்சுக மாகுமோ ?*

## 11. காத்தருள்

*காத்தருள் பரம்பொருளே ....... என்*
*கண்ணான கண்மணியை !*
*நீத்தருள் பிணியிடரை ....... பிள்ளை*
*நீடூழி வாழவருள் !*
*உலகினைப் படைத்தவனே ....... எங்கும்*
*உயிர்க்குயி ரானவனே,*
*நலங்களைத் தருபவனே ....... ஞான*
*நடம்புரி முழுமுதலே !*
*தடைகளைத் தவிர்ப்பவனே ....... என்றுந்*
*தருமத்தைக் காப்பவனே !*
*கொடைவளர் கற்பகமே ....... என்*
*குழந்தையை யாண்டருள்வாய் !*
*கூற்றினை யுதைத்தவனே ....... அரக்கர்*
*குலத்தை வே ரறுத்தவனே,*
*போற்றியுன் பாதமலர் ....... என்*
*புதல்வனைப் புரந்தருள்வாய் !*

## 12. அம்மா அப்பா

*அம்மா அப்பா என்பாய்.......என்*
*ஆசைப் பைங்கிளி மொழியே*
*சும்மா சும்மா சொல்வாய்.......கம்பச்*
*சுவையென் காதிற் சொக்கும்*
*சின்னக் கதைகள் சொல்வேன்.......நீ*
*திருப்பித் திருப்பிச் சொல்வாய்*
*கன்னங்குழிய முத்தம்.......இட்டுக்*
*காளிதாஸனே என்பேன்.*
*பட்டு நிலாவினில் உனக்குப்*

*பாலமுதூட்டும் போதே.......வெண்*
*வட்டமதி என் தட்டே....... என்பாய்*
*வாழிய பாரதி யென்பேன்.*
*தேர்கட்டித் தோழர்க ளோடு.......நீ*
*தெருவினில் ஆடும் போதே*
*ஊர்கட்டியாளும் துரையே.......இந்த*
*உலகினை வெல்வாயென்பேன் !*

## 13. குழலுடன்

*குழலுடன் மத்தளங் கொட்டித் ....... தோழர்*
*கூடிக் குதித்திடப் பாடி ....... அம்மா*
*அழகிளங் கண்ணனைப் போலே ....... நான்*
*ஆடிவருவதைப் பாராய்*
*வேட்டிகளால் திரைகட்டிப் ....... பல*
*வேடங்கள் போட்டொரு நாடகமாடிக்*
*காட்டுவோம் பாரதக் காட்சி ....... நான்*
*கண்ணனின் சொற்படி காண்டீப னாவேன் !*
*வீரப்படைகளைச் சேர்ப்பேன் ....... பொல்லா*

*வீம்புசெய் துஷ்டரை வீழ்த்திநான் வெல்வேன்*
*பாரதத்தாய்ப் பணி செய்வேன் ....... தீய*
*பந்தமறுத்துச் சுதந்தர மீவேன்.*
*கண்ணன், முருகன், இராமன் ....... போலே*
*காந்தி, திலகர், சிவாஜியைப் போலே*
*புண்ணிய வீரனாய் வாழ்வேன் ....... இப்*
*போதே வருங்கால மேதையைப் பாராய்.*

## 14. ஆடிடு கண்மணியே

*ப: ஆடிடு கண்மணியே ....... தோழருடன்*
*ஆடிடு கண்மணியே !*

*அ: பாடிக் குதித்து நடித்துப் பகலெல்லாம் (ஆ)*

*ச: மேகத்தைக் காண்பசுந் தோகை மயிலென (ஆ)*
*திங்களைக் கண்டுள்ளம் பொங்குங் கடலென(ஆ)*
*காற்றினில் ஆடிடுங் கற்பகக் கொம்புபோல் (ஆ)*
*கிட்டி, பாண்டி, கிளித் தட்டு, சடுகுடு (ஆ)*
*மணல்வீடு கட்டி மகிழ்ந்து மகிழ்ந்து நீ*
*மோகனப் பூங்குழல் வேகமாய் ஊதியே (ஆ)*

## 15. ஊர் அதிர முரசு

*ஊர் அதிர முரசு கொட்டுவேன்.......நான்*
*உண்மை சொல்லி முரசு கொட்டுவேன்.*
*பாரில் இல்லை அக்கப் போர்களே.......என்*
*பாப்பா உள்ளம் படைத்து வாருங்கள்*
*மனித ரெல்லாம் எனது தோழர்கள்.......வீர*
*மாதரெல்லாம் என் தோழிகள்.*
*எனது வீடிவ் வுலகம் எங்குமே.......நான்*
*இனிய தென்றல் போல வாழுவேன்*
*நெஞ்சில் அன்புத் தெய்வம் உள்ளதே ....... அதை*
*நேர்மையாக நம்பி வாழுங்கள்.*
*வஞ்சமற்ற சொல்லும் செய்கையும் ....... கொண்டு*
*மலையருவி போல வாழுங்கள்.*

## 16. வரிசையாக

*வரிசையாகச் சேருவோம்*
*வட்டஞ் சுற்றி யாடுவோம்*
*சரிசமான மாகவே*
*தலைநிமிர்ந்து நட நட*

*பலந்தரும் பயிற்சிகள்*
*பஸ்கி கசரத் செய்குவோம்*
*நலஞ்செய் வீர வேலையில்*
*நன்று வென்றி காணுவோம்*

*பத்திருக்கை மூச்சமைதி*
*பண்புறப் பயிலுவோம்*
*சுத்த சக்தி ஓம் ஜபம்*
*சுடர்பெறத் தொடருவோம்.*

## 17. அம்மம்ம நானுன் குழந்தை

*அம்மம்ம நானுன் குழந்தை ....... உன்*
*ஆசைக் கனியாக வந்தேன்*
*அம்மம்மா நானொரு வீரன் ....... விளை*
*யாட்டாய் உலகத்தை வெல்வேன்.*

*நானொரு குட்டி யுலகம் ....... அம்மா*
*நானே இனிவரும் நாடு*
*ஏனம்மா கவலை யினிமேல் ....... உன்*
*இன்பக் கனவே நானம்மா !*

*இந்த விண் புரவியில் ஏறி ....... அம்மா*
*ஏழுல கத்தையும் காண்பேன்,*
*தந்தைக்குப் புகழைத் தருவேன் ....... உன்*
*தங்கப் பரிசுநான் அம்மா.*

## 18. மான்போல

*மான்போலத் துள்ளும் குழந்தை .......பூத்த*
*மலர்போலச் சிரிக்கும் குழந்தை*
*தேன்போலப் பேசும் குழந்தை ....... என்*
*தெய்வ வடிவான குழந்தை.*

*கண்ணான கண்ணுக்கு முத்தம் ....... என்*
*கட்டிக் கரும்புக்கு முத்தம்.*
*விண்ணார் அமுதுக்கு முத்தம் ....... என்*
*வீரக் குழந்தைக்கு முத்தம்.*

*செல்ல அமுதக் குழந்தை ....... உன்னைச்*
*சேர அணைத்தொரு முத்தம்.*
*மெல்ல மழலை மொழிவாய் ....... உன்*
*மென்மலர் வாய்க்கொரு முத்தம்.*

## 19. சுட்டிக் குழந்தை

*சுட்டிக் குழந்தை ....... என்ன*
*சுட்டிக் குழந்தை...*
*கொட்டிக் குதிப்பான் ....... அவன்*
*கும்மாளங் கேளாய்.*

*கொம்பை ஒடிப்பான் ....... ஒரு*
*கோதண்டம் செய்வான்*
*அம்பு வடிப்பான் ....... வீட்டில்*
*அமர்களஞ் செய்வான்.*

தேசியக் கொடிகள் ....... கட்டச்
சேலையைக் கிழிப்பான்
பாசறை யமைப்பான் ....... வீட்டுப்
பழந் துணியாலே.

## 20. நண்டுப் படை

நண்டுப் படைகளைச் சேர்ப்பான் ....... நம்
நாட்டுப் படையிதென் றார்ப்பான்,
சண்டைக் கருவிகள் வேண்டும் ....... தாத்தா
தாரும் தடிக்கம்பை என்பான் ....... அடா

சுண்டைக்காய் பயலே நீ என்றால் ....... நானே
சுபாஷ் சந்திர போஸென நிமிர்வான்.

அண்டை யுலரும் விறகைத் ....... தூக்கி
ஆயுதம் என்று கொடுப்பான்

பட்சணப் பானையைக் காலி ....... பண்ணிப்
படைகளுக் குணவெனத் தருவான்.
தட்சணம் போர்முர சென்றே ....... தட்டுத்
தகரகுவளையில் தாளமடிப்பான்.

## 21. சள்ளையைத் தாங்கோம்

சள்ளையைத் தாங்கிட மாட்டோம் ....... அம்மா
தாயே உன் சேயை யடக்காய் ....... அவன்
பிள்ளையில்லை பெருச்சாளி ....... எங்கள்
பிள்ளைகள் கெட்டனர் தோழி !

அச்சமில்லை யென்று வருவான் ....... எங்கள்
அம்பிப்பயல் துணை பெறுவான் ....... உடன்
பட்சணப் பானைகள் காலி ....... வீட்டுப்
பண்டங்களுக் கில்லை வேலி

பூசைக் கடவுளுருவைத் ....... தெருப்
புழுதியிலே கட்டி யிழுப்பான்
மேசை நாற்காலி போட்டிருந்தே ....... எங்கள்
வீட்டினிலே பொது மன்றம் அமைப்பான்

முத்தமிழ் நூல்களைச் சொன்னால் ....... எல்லாம்
முப்பதெழுத் தெனச் சொல்வான்
கத்தை படித்தவர் முன்னே ....... கவிக்
கம்பனைக் கப்பல் விடுவான்.

## 22. கன்றினை

கன்றினைக் கட்டவிழ்த் தோட்டி ....... அவன்
கைதட்டி விடுதலை என்பான்
தின்றிடென் றன்ன மளித்தால் ....... அதைத்
தெருப்பிச்சைக் காரனுக் கிடுவான்.

*கருமிப் பணக்காரர் வீட்டில் ....... நாலு*
*கழுதைகள் கத்த விடுத்தே*
*விருந்தாளி வந்தனர் ஐயா ....... உடன்*
*வீட்டினைப் பூட்டிடும் என்பான்.*

*ஆத்திரக் காரரைக் கண்டால் ....... மேலே*
*அமைதியாய்க் கிட்டி யடிப்பான்*
*சாத்திரஞ் சொல் மதமெல்லாம் ....... மனச்*
*சாட்சியின் சம்மத மென்பான்.*

*பன்னிரு நாமத்தைக் கண்டால் ....... ஓம்*
*பரமசிவம் எனப் பணிவான்*
*நன்னீறு நெற்றியி லிட்டே ....... நமோ*
*நாராயணா ஹரி என்பான்.*

## 23. கோவிலுக்கு

*கோவிலுக்குவா என்றால் ....... என்*
*கோவில் உலகெனச் சொல்வான்*
*சேவி யிறைவனை என்றால் ....... தொண்டு*
*செய்வதே சேவிப்ப தென்பான்.*

*குடுகுடு குறிசொல்வேன் ....... என்போல்*
*குழந்தைகள் உண்டாகும் என்பான்*
*சடுகுடு பாய்வது போலே ....... எங்கள்*
*சடையை யிழுத்து மறைவான்.*

*புளிய மரத்தி லொளிந்தே ....... பேய்*
*பூச்சாண்டி பயங்காட்டிச் சிரிப்பான்*
*ஒளியப் புதைத்திடும் பொன்னை ....... இவன்*
*ஊருக்கு வாரி யிறைப்பான்.*

*இப்படி இந்த ஊரெலாம் ....... சொல்ல*
*என் மகன் பேரெடுத்தானே*
*தப்பு செயும் பிள்ளை சேயா ....... அவனைத்*
*தண்டிக்காத நானுந் தாயா !*

## 24. வீரங் காட்டினேன்

*கோழைகள் முன் வீரங் காட்டினேன் ....... சற்றே*
*கோபித்துக் கொள்ளாது கேளம்மா*
*ஏழைக்குதவாக் கருமிகள் ....... பண்டம்*
*ஈந்தனன் ஊருக்குத் தருமமே !*

*வாழத் தெரியாதார் பூட்டிடும் ....... சோற்றை*
*வயிறு பசிப்பவர்க் கீந்தனன்*
*தோழரவர் வீட்டுப் பிள்ளைகள் ....... கேட்டாற்*
*சொல்லுவார் என் பக்கம் உண்மையை !*

*காற்றுப் படாதொரு மூலையில் ....... மூடர்*
*காவல் வைப்பார் குழந்தைகளை ....... நான்*
*காற்றாட விளையாடச் செய்கிறேன் ....... துன்பக்*
*கட்டுகள் யாவும் பிளக்கின்றேன் !*

*சோற்றுக்கு வேலை யவசியம் ....... நாட்டிற்*
*சோம்பேறிப் பிள்ளை சுமையன்றோ ?*
*ஆற்று மணலினில் ஆடுவேன் ....... தாயே*
*அன்னம் போட் டென்னை யனுப்பம்மா...*

## 25. பயப்பட மாட்டேன்

*ஊருக்கும் பயப்பட மாட்டேன் ....... அம்மா*
*உண்மையைக் கைவிட மாட்டேன்*
*போருக்கு பயப்பட மாட்டேன் ....... பழம்*
*பொய்யினை நையப் புடைப்பேன்*

*பூச்சாண்டிப் பேச்சை வெறுப்பேன் ....... அம்மா*
*புலியைத் தடவிக் கொடுப்பேன் ....... வெறும்*
*பேச்சாண்டியில்லை நானம்மா ....... என்*
*பெரிய கனவு பலிக்கும்*

*நஞ்சுக்கும் பயப்பட மாட்டேன் ....... வஞ்ச*
*நரிக்கும் பயப்பட மாட்டேன்*
*அஞ்சாமல் யானைமுன் நிற்பேன் ....... நான்*
*அன்புக்கே பணிந்து நடப்பேன்*

*ஆளுக்குப் பயப்பட மாட்டேன் ....... அம்மா*
*அரசுக்கும் பயப்பட மாட்டேன்*
*வாளுக்கும் பயப்பட மாட்டேன் ....... நல்ல*
*வார்த்தையை மதித்து நடப்பேன்.*

*நெஞ்சில் இருக்கும் கடவுள் ....... அம்மா*
*நேரில் இருக்கும் கடவுள்*
*அஞ்சல் அளிக்கும் கடவுள் ....... அவன்*
*அன்பரைக் கைவிட மாட்டான்.*

## 26. செல்லக் கிளியே

*கண்ணே என் கற்பகமே ....... செல்லக் கிளியே*
*கற்கண்டுக் கட்டியே " "*
*பண்ணின் இசையமுதே " "*
*பரமானந்தத் தேனே " "*
*அன்பாயிருக்க வேண்டும் " "*
*அழகாய்ச் சிரிக்கவேண்டும் " "*
*முன் கோபம் கூடாதம்மா " "*
*மூத்தோர் சொல் கேட்கவேண்டும் " "*
*தெய்வ பக்தி செய்ய வேண்டும் " "*
*தேச சேவை செய்ய வேண்டும் " "*
*பொய் கோள் பொறாமையின்றிச் " "*
*பொது நலஞ் செய்யவேண்டும் " "*

நிமிர்ந்து நடக்க வேண்டும் ” ”
நிரம்பப் படிக்க வேண்டும் ” ”
அமர்ந்து நினைக்க வேண்டும் ” ”
அமைதியாய் வாழவேண்டும் ” ”
பலத்தைப் பெருக்க வேண்டும் ” ”
பயத்தை ஒழிக்க வேண்டும் ” ”
நலத்தைப் புரிய வேண்டும் ” ”
நடத்தை உயர வேண்டும் ” ”

## 27. ஆரிரரோ ஆராரோ

ஆரிரரோ ஆராரோ
ஆனந்தப் பொன் மயிலே
ஆரிரரோ ஆராரோ
அன்புக் கனியமுதே

ஆலம் விழுதினிலே
ஆகாசப் பந்தலின் கீழ்
மேலாக்கைத் தூளி கட்டி
மெல்லப் படுக்கவைத்தேன் (ஆ)

காட்டுக் கிளிமொழியும்
கட்டை வண்டித் தெம்மாங்கும்
பாட்டாளித் தில்லானாவும்
பாட நீ கண் வளராய் (ஆ)

ஆற்றிசையும் புள்ளிசையும்
அன்புமலர் கொஞ்சி வரும்
காற்றிசையும் தாலாட்டக்
கண்ணே நீ கண்ணுறங்காய் (ஆ)

## 28. பாட்டாளி வாழ்வே

பாட்டாளி வாழ்வே
பழுதில்லா வாழ்வாமே
நாட்டாளி மன்னருக்கும்
நம்முரிமை யின்பமுண்டோ ?(பா)

வெள்ளெலும்பு தேய நான்
வேலை செய்த கூலி கொண்டே
சுள்ளி பொறுக்கி வந்தே
சூடான கஞ்சி வைப்பேன் (பா)

அரிய குணமுடனே ஆளாகி நான் பார்க்கப்
பெரிய கனவுடனே பிள்ளாய் நீ கண்வளராய் (பா)

கூழைக் குடித்துக் குடிசையிலே வாழ்ந்தாலும்
ஏழைக் குழந்தை நீ என்றாலும் என்னரசே (பா)

## 29. கண்ணே என் கண்மணியே

*கண்ணேயென் கண்மணியே கட்டிக் கனிரசமே*
*விண்ணே விண்ணாரமுதே வீர விளக்கொளியே*
*காதற் பசுங் கிளியே, கற்பகப் பூங்கொடியே*
*கீத மணிக் குயிலே கிண் கிணி யன்னமே*
*அன்பலை புரண்டோடும் ஆழிமுத்தே மணியே*
*இன்பலை புரண்டோடும் என்மார்பிற் கண்வளராய்*
*தேன்மலர்த் தென்றலும் திங்களின் வெண்ணிலவும்*
*வான்மலர் மணிகளும் வாழ்த்த நீ கண்வளராய்*
*ஏகரச மாய்ச் சூழும் இயற்கை தாலாட்டிடவே*
*பூகோளத் தொட்டிலிலே பூப்போலக் கண்வளராய் !*

## 30. பாசமெல்லாம் உன்மேல்

*பாசமெல்லாம் உன்மேல்*
*பட்சமெல்லாம் உன்மேல்*
*ஆசை மரகதமே*
*அன்பேநீ கண்வளராய்*

*தோகை மயிலினைப் போல்*
*தொண்டர் பரவசம் போல்*
*மேகத்தின் மின்னலைப்போல்*
*விளையாடிக் கண்ணுறங்காய்*

*கட்டிக் கனியமுதும்*
*கற்கண்டுப் பாயசமும்*
*கொட்டுங் கவிரசமும்*
*கொஞ்சுமுன் பேச்சாமோ ?*

*கண்ணன் குழலிசையும்*
*கலைவாணி யாழிசையும்*

*பண்ணார் தமிழிசையும்*
*பரவநீ கண்வளராய்*

*திருக்குற ளின்பம் போல்*
*திருவாசகத் தேன்போல்*
*உருக்கும்அருட் பாபோலே*
*உலகப் புகழ் பெறுவாய் !*

## 31. வேதரிஷிகள்

*வேத ரிஷிகள் போலே*
*வேதாந்தச் சங்கரர் போல்*
*கீதைக் கண்ணன் போலுன்*
*கீர்த்தி என்றும் வளர்க !*

*சேர சோழ செழியர்*
*சின்னபெரிய மருது*
*வீர வேலு நாச்சி போல*
*வீறு பெற்று வாழ்க !*

அறம்பொரு ளின்பமும்
அருட்சம யோகமும்
திறம்படத் தேர்ந்து நீ
தீரனாய் வாழ்கவே !

உத்தமர் தவத்தை ....... சம
யோக வித்தையினை
பத்தினி அறத்தைப் ....... பரி
பாலித்தென்றும் வாழுவாய்

சிங்கம் போல் நெஞ்சும் ....... தூய
சித்தர் போல் அறிவும்
தங்கம்போல உடலும்
தழைத்து நீடு வாழ்வாய் !

## 32. முத்து முகம்

முத்துமுகம் பார்த்தென் ....... மனத்திலோர்
மோகங் கனிந்ததப்பா
கத்துது நெஞ்சக் கிளி ....... இளங்
கண்ணாவென் றேதினமும் !

காலைப் பசுவயலோ ....... வசந்தக்
காட்சியின் கட்டழகோ
சோலைக் குயிலுடனே ....... குழலும்
சொக்கும் இசையமுதோ !

மாலை வனப்பினிலே ....... மலர்ந்த
மல்லிகைப் பூங்கொடியோ
கோல வியற்கையிலே .......பூத்துக்
குலுங்கும் காவியமோ !

எத்துந் திரைக்கடலைப் ....... பொன்னாக்கி
ஏறுஞ் சுடரொளிபோல்
சித்தத் திரைகளிலே ....... இன்பந்
திருநட மாடுதம்மா.

## 33. ஆடிப் பாடல்

வா, வா, மயிலே, வனக் குயிலே,
போவோம் காலை பூஞ்சோலை !
கொக்கொக் கோழி கூவுது பார்,
அக்குப் பட்சி அகவுது கேள் !
பார்பார் கிழக்கே பசுங் கதிரை !
சேர்சேர் மலர்க்கை சேவிப்போம்
தேவா லயமாம் திருவுலகம் ;
சீவர்க ளெல்லாஞ் சிவமயமாம்.
அன்பா யிருப்போம் அனைத்துயிர்க்கும்
பண்பாய் நடப்போம் பாருலகில்.

## 34. தேகப் பயிற்சி

தேகப் பயிற்சி செய்வோம் ....... வரிசையாய்ச்
சேர்ந்து நிமிர்ந்து நிற்போம்;

*வேகமாய்க் கால்வீசி ....... நடப்போம்*
*வேங்கை போற் பாய்ந்திடுவோம்.*

*சோம்பலை வெட்டியெறி ....... இடுப்பைத்*
*தோகை மயில்போல் வளை;*
*"ஓம்" என் றுயிர்த்துவிடு ....... மார்பும்*
*உரம்பெற் றோங்கிடவே !*

*கையை மடக்கிடுவோம் ....... முன்னும் பின்னும்*
*கடிது சுழற்றிடுவோம்*
*பையவுட் கார்ந்தெழுவோம் ....... பஸ்கிசெய்து*
*பாதத் தசை வளர்ப்போம்.*

*வேர்த்துச் சதைபுரளக் ....... கசரத்து*
*வேண்டுமட்டுஞ் செய்வோம் ....... கை*
*கோத்து நடம்புரிவோம் ....... அழகிய*
*கோயிலுலகினிலே*

## 35. சிங்கமே

*கண்விழித் தெழுந்து நின்று கர்ஜனை செய்வாய்*
*மண்விழித் தெழுந்து நிற்க வாழி சிங்கமே !*
*எல்லையற்ற வானம்சூழ் இயற்கை யுலகிலே,*
*தொல்லையற்ற சாதனத்தைச் சொல்லு சிங்கமே !*
*பற்றில்லாது சுற்றுங் காற்றின் பாட்டை நம்மவர்*
*கற்றறிந்து நிற்றலே கவலை போம்வழி !*
*கதிரவன் போல் அமைதியாகக் கடமை காத்திடின்*
*எதிரெவர் நமக்கினி இதயச் சிங்கமே*
*மானிடத்துள் வாழுகின்ற தெய்வம் யானெனும்*
*ஞான மோங்க வானம் போல ஞாலமோங்குமே !*

## 36. குர் குர்

*குர் குர் குரு குரு குரு குரு குர்*
*பர்ரென விமானம் பறப்பதைப் பாராய் !*
*பாய்ந்து ஸ்புட்நிக் தாவுதுபார்.*
*உன்னத வானில் ஓடுமின் போலும்*
*மின்னலைப் போல விளக்குட னிறங்கும்.*
*ஏறுவதறிவோம் இறங்குவதறிவோம்*
*ஆறுபோ லேகும் ஆச்சரியம்பார் !*
*காலையிற் சென்னை கடும்பகல் பம்பாய்*
*மாலையில் டில்லி மறுநாள் மாஸ்கோ !*
*கெய்ரோ ரோமுடன் ஜெனிவா பாரிஸ்*
*பெர்லின் லண்டன் நியூயார்க் கூபெக்*
*தோகியோ ஹாங்காங் பீகிங் மணிலா*
*சைகோன் சிங்கப்பூர் ரங்கோன் சுற்றி*
*நன்றே திரும்பி நண்பரைக் கண்டே*
*ஒன்றே உலகென உரைத்திடுவோமே !*
*உயர்விண் ணுலகையும் எட்டிடுவோமே.*

## 37. பாப்பா மதம்

*அப்பாவை அம்மாவை மதிப்போம்*
*அறிவை அனுதினம் வளர்ப்போம்*
*எப்போதும் கடவுளைத் துதிப்போம்*
*எல்லார்க்கும் அன்பாக நடப்போம்*

*வானத்தைப் போலத் தருவோம்;*
*மண்ணுயிர்க் குதவிட வருவோம்.*
*மானத்தை உயிரெனக் காப்போம்;*
*மனச்சாட்சி சொற்படி கேட்போம்.*

*கோள்பொய் பொறாமையை விடுவோம்*
*கோபப் பிசாசைச் சுடுவோம்.*
*நாளும் பெரியவ ராவோம்;*
*நல்ல புகழுடன் போவோம்.......*

*சாப்பாட்டுக்குத் தொழில் செய்வோம் !*
*சத்திய சேவை புரிவோம்;*
*பாப்பா மதமிது பாரீர் ;*
*பண்புடன் போற்றிட வாரீர் !*

## 38. காலை வண்டு போலவே

*காலை வண்டு போலவே*
*வேலை செய்து பாடுவோம்*
*புதிய நல் வழியிலே*
*பொது நலங்கள் செய்குவோம்*
*வீடு கட்டி ஆடுவோம்*
*நாடு கட்டி யாளுவோம்.*
*கற்றறிந்து நின்று நாம்*
*சுற்றுங் கல்வி நல்குவோம்.*
*வைய மான தோட்டத்தில்*
*கையுழைப்பால் உண்ணுவோம்*
*உழைத்து வந்த செல்வத்தைப்*
*பகுத்து வாழப் பழகுவோம்.*
*உழைப் பவர்க்கே உண்டுடுத்துப்*
*பிழைப்புரிமை யுலகிலே.*

## 39. கூடிக் குதிப்போம்

*கூடிக் குதிப்போம் குழந்தைகளா*
*குயிலும் மயிலும் கிளியும்போல்.......*
*ஓடிப் பிடிப்போம் ஒளிந்தவனை*
*உள்ளே பார் பார் கள்ளனையே (கூ)*

*அமுதம் பொழியும் நிலவினிலே*
*அழகிய வானின் விரிவினிலே*
*குமுதமிட்டுக் கைகொட்டிக்*
*கொட்டமடிக்கும் கடல்போலே (கூ)*

கட்டும் கவலையு மில்லையினி
காட்டுப் பறவை போல் வாழ்வோம்
ஒட்டுற வான தோழர்களா !
உள்ளங் குளிரத் துள்ளிடுவோம் (கூ)

வீர சுதந்தர பேரிகையை
விண்ணெட் டிடவே கொட்டிடுவோம்
பாரீர் உலகக் கோயிலெங்கும்
பரமானந்தத் தாண்டவமே (கூ)

### 40. நிழல்

நிழலென் றென்னை யிகழாதீர் !
நிழலைப் பிரிந்த பொருளுண்டோ ?
அழியா உயிரைப் பிரிந்தவுடல்
அதனோ டுயிர்போல் அணைந்திருப்பேன்.
வழுவா நேயன் என்னைப்போல்
வையத் துண்டோ மானிடரே ;
அழகின் செருக்கைச் சமனாக்கும்
ஆற்றல் எனது தோற்றமதே
அனைவர் பின்னும் பிரியாத
வினை போலேகும் வீறுடையேன் !

### 41. நானொரு சிற்பி

நானொரு சிற்பி; நல்ல சிற்பி
வானுறும் எனது மாளிகை பார் !
கொத்தன் தச்சன் கொல்லன் யான்.
புத்தம் புதிய புலவன் யான்.
அளவாய்ச் செங்கல் அடுக்கிடுவேன்
மளமள வென்றே மதிலேறும்.
காரை பூசிக் கண்கவரக்
கூரை மேவிக் குடி யிருப்பேன்
தோட்டம் போட்டுத் தொழில் செய்வேன்;
வீட்டுக் குள்ளே விருந்திடு வேன்.

### 42. சுத்தமாக

சுத்தமாகக் குளிப்போம்
சுத்தமாக உடுப்போம்
சுத்தமாக வாழ்வோம் ....... பாப்பா
சுறு சுறுப்பா யிருப்போம்.

அசுத்தமான பண்டம்
அத்தனையும் நோயாம்
பசித்துணவு கொள்வோம் ....... சத்துப்
பண்ட முண்டு நாட்டில்
வீடுசுத்தஞ் செய்வோம் ....... உடல்

வேர்க்க வேலை செய்வோம்
ஏடுகற்ற பயனைப் ....... பாப்பா
இனிது நின்று பார்ப்போம்

## 43. நல்ல காற்று

*நல்ல காற்று, நல்ல தண்ணீர்*
*நல்ல சுற்றமே*
*நல்லவேலை நல்லுணவு*
*நல்ல வெள்ளுடை*
*நல்ல சிந்தை நல்ல செய்கை*
*நல்ல சொல்லுடன்*
*நல்லறிவைப் போற்றி நாளும்*
*நன்று வாழுவோம்.*
*எல்லாரும் விரும்பிடவே*
*இனிமையாகப் பழகு*
*எல்லா வுயிரும் உன்னுயிரே*
*என்று நன்றுகருது*
*அன்பிருக்கும் நெஞ்சினிலே*
*அருளிருக்கும் பாப்பா !*
*இன்பமாக மனிதர் வாழ*
*இதய சுத்தம் வேண்டும்.*

## 44. காலத்தைப் பொன்செய்

*காலத்தைப் பொன்னாக்க வேண்டும்*
*கைத்தொழில் செய்திட வேண்டும்*
*ஞாலமெல்லாந் தொழிற் சாலை*
*நமக்குந் தொழில் அதி லுண்டு.*
*பூட்டிய பொன்னை எடுத்தே*
*போட்டி பொறாமைகளின்றி*
*நாட்டின் வறுமை மடமை ....... தீர*
*நல்ல தொழிலை வளர்ப்பேன்.*
*காகிதப் பூக்களும் செய்வேன்*
*கப்பலும் வண்டியும் செய்வேன்*
*வேக விமானமும் செய்வேன் ....... நான்*
*விளையாட்டுச் சாமானும் செய்வேன்*
*'ஓ'மெனச் சக்கரம் சுழன்றால்*
*உழவு நெசவு வளர்ந்தால்,*
*பூமியிலே பஞ்ச மில்லை*
*பொன்னைத் தொழில்செய்ய வாரீர்.*

## 45. செவி குளிரப் பாடு

*செவிகுளிரப் பாடிடுவாய்*
*செங்கனிவாய்க் குயிலே,*
*கவிகள் புகழ் பொன்னாடு*
*கன்னித் தமிழ் நாடே.......*
*மலையருவி கலையருவி*
*மங்களயா ழருவி*

அலைவீசி முழங்குகின்ற
 அருளருவி நாடே !
முப்புறமும் கடலணிந்த
 முத்துத் தமிழ் நாடே;
எப்புறமும் இன்பவளம்
 இலகு தமிழ் நாடே !
வாழியசெந் தமிழ் நாடு
 வாழ்க தமிழ் மொழியே
வாழியசெந் தமிழர்குலம்
 வாழ்க பொதுநலமே.

## 46. அருமையான நண்பன்

அருமையான நண்பன் ....... நம்
 அடிமை தீர்க்கும் பண்பன்
தருமசக்தி யன்பன் ....... மனச்
 சாட்சி யெங்கள் அரசன்.

வரிநெருக்க மாட்டான் ....... அவன்
 வகுத்த நல்ல வழியே
சரியென் றேகுவோமே ....... மனச்
 சாட்சி நல்ல மன்னன் !

பட்டம் பதவி வேண்டான் ....... தங்கப்
 பதக்க மென்றும் வேண்டான்
சட்ட திட்டங் காப்பான் ....... இது
 தவறெனக் குறிப்பான்

கொடுமை செய்த பேரை ....... நெஞ்சிற்
 குத்திக் காட்டுங் கோமான்
நடுநிலைமைத் தோழன் ....... அவனை
 நம்பி வாழ நலமே.

## 47. குடுகுடுப்பை

குடுகுடு குடுகுடு குறிசொல்வேன்
 கொஞ்சம் தயவாய்க் கேளண்ணா.
விடுவிடு விடுவிடு வீண்செருக்கை
 விளையும் பயிரைப் பார்முனையில்.

கொடுகொடு நல்ல மழைபோல
 குவித்த சொத்து நிலையாதே
சிடுசிடு கோபம் பொல்லாது
 திருட்டுப் பண்டம் நில்லாது.

கோள் பொய் சூது பொறாமைகள்
 கொட்ட மடிக்கும் கெட்டமனம்
தேள்விஷப் பாம்பு நரிபுலியே
 திரியும் காட்டுப் புதர்போலே.......

உனக்கு நல்லது வேண்டுமென்றால்
 ஊருக்கு நல்லது செய்யண்ணா;
எனக்கென தென்றே குவிக்காதே
 ஈயாச் செல்வம் தீயதுவே

குடுகுடு குடுகுடு குப்பண்ணா
குறுகுறு வென்றே பாராதே;
நடுநடு மாவை ; மாம்பழமாம்
நம்வினை போலவே நரவாழ்வாம்.

## 48. தலை நிமிர்ந்து

தலைநிமிர்ந்து நிற்பவன்
தணலும் சிங்கம் போன்றவன்
சிலைவடித்த தென்னவே
திரண்டுருண்ட மேனியான் ;

அச்சமற்ற செஞ்சொலான்
அழுக்கிலாத நெஞ்சினான்
உச்சமான சிந்தையான்
உதவிசெய்ய முந்துவான்.

சொந்த நாட்டைக் காப்பவன்
சுரண்டலற்ற நேசனாம்
எந்தநாளும் விளங்குவான்
இரவி மதியிலங்கல்போல்.

## 49. வித்துக்கு விளைவுண்டு

வித்துக்கு விளைவுண்டு
வேலைக்குக் கூலியுண்டு
சொத்தையெனச் சோம்பாது
சுறுசுறுப்பாய் வேலை செய்வோம்;
வயிறெக்கித் தள்ளாடும்
வறுமை தரும் சிறுமையில்லை,
கயிறு முறுக்கியேனும்
கஞ்சி குடிப் போமடா !
உழைப்பவர்க்குச் சீதேவி ....... சும்மா
உட்கார்ந்தால் மூதேவி
பிழைப்பதற்குக் கவலையில்லை
பிடிகலப்பை நல்லண்ணே !
பஞ்சிலே நூலிழுத்துப்
பாவுபோட்டு நெய்திடுவோம்;
அஞ்சிலே வளைந் துழைத்தால்
அறுபதுக்கும் பஞ்சமில்லை !

## 50. பனை மரத்தில்

பனை மரத்தில் பாளை சீவிப்
பதநீர் வடித்துத் தாரேன்
தினமும் பத நீருண்பாய்
தெம்பு பெருகும் பாராய் !
காலைப் பதநீர் காய்ச்சி, சில்லுக்
கருப்பட்டி செய்திடுவோம்.

*ஆலைச் சீனி தோற்றுப்போகும்*
*அத்தனையும் அமுதாமே*

*கருவலான செம்பு போலக்*
*காய்த்த நொங்கை வெட்டியே*
*உறுஞ்சி உறுஞ்சிக் குடித்திடுவோம்*
*உள்ளங் குளிரும் இன்பமடா*
*பதநீரும் நொங்குமுண்டு*
*பலசாலி யாவோமே*
*மதி மயக்குஞ் சனியனான*
*மதுபானம் ஒழிப்போமே*

## 51. படபடென

*படபடெனச் சிரிக்குதம்மா பச்சை மத்தாப்பு*
*சடசடெனப் பொரியுதம்மா தங்க மத்தாப்பு*
*தீச்சொரிந்து சிரிக்குதம்மா சிவப்பு மத்தாப்பு*
*பூச்சொரிந்து பாடுதம்மா பொங்கு மத்தாப்பு,*
*கலகலெனப் பேசுதம்மா கம்பி மத்தாப்பு*
*உலகிருளை விழுங்குதம்மா ஒளிசெய் மத்தாப்பு*
*முகம்பொலிய வீசுதம்மா முத்து மத்தாப்பு*
*அகம் பொலிய தாவுதம்மா அன்பு மத்தாப்பு.*

## 52. ஊருக்குத் தொண்டு

*ஊருக்குத் தொண்டு செய்வோம் ....... நம்*
*உடலுக்குத் தொண்டு செய்வோம்*
*பாருக்குத் தொண்டுசெய் பாக்கியமே*
*பர மானந்தம் ஆனந்தமே !*

*வீதியைப் பெருக்கிடுவோம் ....... கெட்ட*
*வீச்சத்தைப் போக்கிடுவோம்*
*சோதி துலங்கிட வீடுகள் யாவையும்*
*சுத்தமாய் வைத்திடுவோம்*
*அழகினைத் தொழுதிடுவோம் ....... நம்மை*
*அணிசெயும் கலை வளர்ப்போம்.*
*பழகிய கல்வியைப் பலரும் படித்திடப்*
*பள்ளிகள் அமைத்திடுவோம்.*

*நோய்களைத் தவிர்த்திடுவோம் ....... நாம்*
*நூறாண்டு வாழ்ந்திடுவோம்.*
*தாயெனும் இயற்கையைச்*
*சேயென நம்பியே*
*சாதனம் செய்திடுவோம்.*

## 53. புண்ணிய வாழ்க்கை

*புண்ணிய மாகிய வாழ்க்கையும் ....... பரி*
*பூரண மாகிய சக்தியும்,*
*எண்ணிய எண்ணஞ் செயல்பெற ....... வெற்றி*
*எய்துந்திறமையும் வேண்டினேன்*

*கந்தன் முருகன் போல் ஆற்றலும் ....... நெற்றிக்*
*கண்ணன் போல் யோகக் கனலுடன்*
*சுந்தர ராமனின் வீரமும் ....... அருள்*
*சுத்த சுதந்தர சக்தியே !*

*மாதவன் கீதையின் ஞானமும் ....... பார்த்தன்*
*மாதிரி வெற்றித் திறமையும்,*
*ஆதவன் போல்ப் பொலிவுடன் ....... அருள்*
*ஆன்மப்பொது நிலைத் தெய்வமே.*

*புத்தனைப் போலத் துறவுடன் ....... மேரி*
*புத்திரன் போலப் பொறுமையும்,*

*சத்திய காந்தியைப் போலவே ....... தியாக*
*சாதன வாழ்க்கையுந் தந்தருள்.*

*அப்பரைப் போலே அருட்பணி ....... நம்*
*ஆழ்வாரைப் போலத் தவநிலை*
*இப்பொழுதே யெனக் கீகுவாய் ....... என்*
*இதயக் கமலக் கடவுளே.*

## 54. ஆகாசப் பந்தலின் கீழே

*ஆகாசப் பந்தலின் கீழே*
*ஆயிரங் கோடி உலகம்*
*வேகமாய்ச் சுற்றிச் சுழலும் ....... இந்த*
*மேதினி தூசி யளவே !*

*சூரியத் துண்டம் இதுவே ....... இந்த*
*துண்டத்தில் நாமோர் அணுவே.*
*மாரியும் கோடையும் போலே*
*மாறும் இதன் இயல்பாமே !*

*நாடக மேடையைப் போலே,*
*நானில வாழ்க்கையும் ஆகும்*
*ஆடுவோம் வேடம் போட்டே*
*ஆட்டம் முடிந்ததும் ஓட்டமே.*

## 55. சுதந்தரம் அடைந்தோம்

*சுதந்தரம் அடைந்தோம்*
*துணிவுடன் எழுந்தோம் ;*
*நிதமொரு நன்மை*
*நிச்சயம் புரிவோம்.*

*இந்திய நாட்டின்*
*இளஞ்சுடர் மணிகள்,*
*முந்திசை வீரர்*
*முன்னணி வகிப்போம்.*

*புலவர்க ளாவோம்*
*புதுமைகள் காண்போம்;*
*உலகினை வெல்வோம்*
*உண்மையி னாலே.*

## 56. நாட்டுத் திருநாள்

*நந்திரு நாட்டுத் திருநாள் ....... அது*
*ஞாலம் புகழும் பெருநாள்*
*கொந்தளித்தாடும் கடல்போல் ....... வெற்றி*
*கொட்டிக் குதித்திட ....... வாரீர் !*

*வெள்ளிப் பனிமலை ஆடும் ....... நம்*
*வெற்றிக் கொடியைப் பிடித்தே*
*துள்ளி நடம்புரி வோமே ....... நாம்*
*சுத்த சுதந்தர வீரர்*

*சுற்றிச் சுரண்டிச் சுழற்றி ....... எம்மைச்*
*சூரையிட் டோடும் பகையைப்*
*பற்றி முறியடிப் போமே ....... தமிழ்ப்*
*பண்பை இனிவளர்ப் போமே.*

*தென்னையும் வாழையும் மாவும் ....... நல்ல*
*தேமலர்ச் சோலையும் செழிக்க ....... நம்*
*அன்னையை நல்லணி செய்வோம் ....... அறி*
*வாற்றலினால் இசை எய்துவோம்.*

## 57. டும் டும் டும்

*டும் டும் டும் எனப் பறையடிப்போம்*
*தும் தும் துந்துமி முழங்கிடுவோம்*
*ஜம் ஜம் ஜம் என முன் செல்வோம்*
*ஹம்ஹூம் எனவரும் பகைவெல்வோம்*
*பம் பம் பம் எனப் பாண்டிலுடன்*
*பாய்ந்து பாய்ந்து போர்புரிவோம்*
*சிம்மக் கூட்டம் போல் நடப்போம்*
*ஜெய ஜெய பேரிகை கொட்டிடவே*
*அதர்மம் வீழத் ....... தருமம் வாழ*
*அர்ஜுனன் போலே அமர்வெல்வோம்*

## 58. அன்பினிலே

*அன்பினில் ஊறுகின்ற*
*அன்னை அமுதமடி*
*இன்பத் தமிழ்மொழியே ....... கிளியே*
*இனிய உயிர் நிலையாம்.*

*உண்ணும் உணவுடனே*
*உயிர்த்திடும் காற்றுடனே*
*எண்ணடி செந்தமிழை ....... கிளியே*
*எந்தாய் நீ வாழ்க என்றே*

*பழைய மெய்ஞானமுடன்*
*பழகும் விஞ்ஞானமுடன்*
*தழையக் கலைவளர்ப்போம் ....... கிளியே*
*தமிழைப் புதுமை செய்வோம்.*

## 59. தலை நிமிர்ந்து

*தலைநிமிர்ந்து கைகள் வீசியே,*
*தாவித்தாவித் தோழர் முன்செல்வோம்*
*உலகமெங்கும் அமைதி நாட்டுவோம்*
*ஒன்றுபட்ட உண்மை வீரர்காள் !*
*கடவுளுக்கும் மனித ஜாதிக்கும்*
*கடமையான தொண்டு செய்குவோம்*
*இடர்களை எதிர்த்து வெல்லுவோம்*
*இன்பமின்ப மென்று முன்செல்வோம்.*

*போற்றி அன்பு பொங்கு நெஞ்சமே*
*பொதுநலப் புலமை போற்றியே !*
*போற்றி ஆன்ம நேயவாழ்க்கையே ....... சம*
*யோக வாழ்வு போற்றி போற்றியே.*

## 60. தாத்தா பாட்டு

*தேசத்திலே பெரிய தாத்தா ....... நாங்கள்*
*தெய்வமெனக் கொண்டாடுந் தாத்தா*
*நேசத்திலே பெரிய தாத்தா ....... கொண்ட*
*நினைப்பைச் செய்து முடிக்கும் தாத்தா*
*கூனிக் குறுகியிருந்தாலும் ....... இளங்*
*குமரன் என்று மெங்கள் தாத்தா*
*வானக் கருமுகிலைப்போலே ....... எங்கள்*
*வாழ்வு தழைக்க வந்த தாத்தா*
*என்பு தெரிய மெலிந்தாலும் ....... உள்ளே*
*இமயத்தினும் பெரிய தாத்தா*
*அன்பு வடிவான தாத்தா ....... எங்கள்*
*அடிமைத் தளையறுக்குந் தாத்தா*
*கோலைப் பிடித்து நடந்தாலும் ....... இளங்*
*குமரன் என்று மெங்கள் தாத்தா*
*காலை போல் சாந்தமுள்ள தாத்தா ....... நம்*
*கவலை துடைத்தருளும் தாத்தா.......*
*காந்தித் தாத்தா ....... காந்தித் தாத்தா !*

## 61. அஞ்சாத

*அஞ்சாத நெஞ்சுரமும் ....... அதில்*
*ஆன்ம வீரக் கனலும்*
*துஞ்சா முயற்சிகளும் ....... பொதுநலத்*
*தொண்டுமருள் பரமா !*

*பங்கப் படா துலகில் ....... வாழ்வைப்*
*பாழுக் கிரைக்காமல்*
*சிங்கப் படை போலே ....... வாழுந்*
*திறமை தந்திடுவாய்.*

*ஏழை யடிமை யென்றே ....... எம்மை*
*எவரும் ஏசாமல்*
*வாழையடி வாழையாய்ச் ....... செல்வ*
*வளம்பெற் றோங்கவருள்.*
*செய்யுந் தொழிலெல்லாம் ....... தூய*
*தெய்வ நிவேதனமாய்*
*உய்யும் படிக் கருள்வாய் ....... போற்றி*
*உலகப் பெருமானே !*

## 62. தரும வீரம்

*தருமவீரம் வேண்டும் ....... ஜீவ*
*சக்தி பெருக வேண்டும்*
*கருமவீரராக ....... நல்ல*
*கடமைகாக்க வேண்டும்.*
*எளிய வாழ்வு வேண்டும் ....... தூய*
*இன்பம் பொங்க வேண்டும்*
*ஒளிமிகுந்த நெஞ்சில் ....... சம*
*யோக சக்தி வேண்டும்.*
*வெல்லும் சொல்லும் செயலும் ....... ஐய*
*வீரத்திண்புங் கொண்டே*
*அல்லும் பகலும் உனக்கே ....... பரமா*
*அன்புத் தொண்டு செய்வோம்.*
*தீமை நலிய வேண்டி ....... அறம்*
*செழித்து வளர வேண்டி*
*வாய்மை நிலவ வேண்டி ....... நாங்கள்*
*வாழ வேண்டும் இறைவா !*

## 63. இந்த உலகம்

*இந்த உலகமென் கோயில் ....... இங்கே*
*இலகும் உயிர்த்தொகை சாமி ....... தூய*
*சிந்தனையே நல்ல ஜபமாம் ....... தொண்டு*
*செய்வதே எனது தவமாம்.*

*புலம்பித் தவித்திடும் ஏழை ....... மக்கள்*
*புண்ணைத் துடைப்பதே பூசை*
*நலம்புரிவதே நாளுந் துதியாம் ....... திட*
*நம்பிக்கை எனது மதியாம்.*

*உழைத்துப் பிழைப்பதே சரியை ....... இந்த*
*ஊருக் குதவுவது கிரியை*
*பழுத்த உள்ளொருமை யோகம் ....... எல்லாம்*
*பரமனருளென்பது ஞானம்.*

*சாதி மதபேத மில்லா ....... மனச்*
*சாட்சிவழி நடந்து வருவோம்*
*ஆதி சுத்தசக்தி யிறைவன் ....... நாம்*
*அன்புசெய்யும் அருட் குருவே !*

## 64. வயிற்று வலி

*வயிற்றுவலி என்றழுதான் பட்டிக்காட்டான்
மருத்துவர் சீட்டெழுதி யிதை உண்களென்றார்
பயிற்சியறு பேதையந்தச் சீட்டை யுண்டான்
பாவிமிக வலியாலே பாடுபட்டுத்
துயர்சொல்லி யழுதுமது சீட்டைத் தின்றேன்
துடிக்குதுயிர் எனமுடா சீட்டில் உள்ள
உயர்மருந்தை உண்ணாமல் காயிதத்தை
உண்டதேன் ? எனஎனிமா வைத்தா ராங்கே*

## 65. அரியாட்சிக்காடு

*அரியாட்சிக் காட்டருகே அண்ணலூராம்;
ஆட்டுமகா நாடொன்று கூடிற் றாங்கே;
'நரியாட்சிக் கொடுமைகளை நசுக்க வாரீர்
நன்றாகச் சேர்ந்திருந்தால் நமதே வெற்றி
பிரியாத நமதிடையேப் பேய்புகுந்தால்,
பிதுக்கியெறிவோ' மென்று வீரம்பேசிச்
சரியாகத் தலையாட்டுத் தம்பிரான்கள்
சதை புரளச் சடைப்புளிபோல் ஒட்டி நின்றார்.
சரியான முன்னிருட்டு; காட்டி னின்று
சலசலத்தே "ஊள்" என்று கேட்டதம்மா !
"நரியடா ! ஐயையோ செத்தேன் !" என்று
நாப்பிதுங்கக் கதறிமனம் பதறிப்போன!
தெரியாதா கடாப்புத்தி ; திசைக்கொன்றாகச்
சிதறியதைக் கண்டநரி சிரித்துக் கொண்டே
அரியவிருந் துண்டகதை யாருஞ் சொல்வார்;
அச்சத்தால் எமன் வருவான் அறிகுவீரே !*

## 66. பாரத மணிகள்

*வாழிய பாரத மணிகள் ....... நல்ல
    வரம்பெற்ற மானிடத் தேவர் !
வேதரிஷிகள் வால்மீகி—வியாசர் காளிதாஸர்
    ஆதிசங்கரர் புத்தர்—அப்பர்—மணிவாசகரே (வாழி)*

*ராம தாஸர் சிவாஜீ — ராம
    கிருஷ்ண விவேகானந்தர்
ராம தீர்த்தர் கவிதாகூர் — பாரதி
    ரமணர் அரவிந்தர் காந்தி (வாழி)*

*வள்ளுவர், ஔவை மூலர் — தாயு
    மானவர் அருணர், கம்பர்
வள்ளலாருடன் சமயோகி — வையம்
    வாழவந்ததிருக் கூட்டம் (வாழி)*

## 67. பொங்கு செந்தாமரை

*பொங்கு செந்தாமரை பூத்த முகத்தினில்*
*புன்னகைத் தேன் பொழிவாள் — எங்கள்*
*மங்கல மான மனைத்திரு வாழிய*
*மன்னுயிர் வாழியவே !*
*பாரினை யூட்டும் பராசக்தி யன்னையின்*
*பங்கயத் தாள் பணிவோம் ....... ஜய*
*வீரரைத் தந்த விழுமிய செல்விக்கு*
*வெற்றிகள் கூறிடுவோம்*
*எங்குல மோங்கிடத் தங்கக் கனிகளை*
*ஈன்ற ஜகன் மாதா ....... அவள்*
*செங்கையை முத்தமிட் டின்பச் சிலிர்ப்புடன்*
*சேம மடைந்திடுவோம்.*

## 68. இளம் பயிர் வாழ்த்து

*ஈசன் கருணையினால் ....... எந்தாயின்*
*இளம்பயிர் வாழியவே !*
*பூசனை மாமலர் போல் ....... புண்ணியப்*
*புன்னகை பொங்குகவே*
*மாசறு வாழ்வுடனே ....... ஞான*
*மாணிக்கர் வாழியவே !*
*தேசஞ் செழித்திடவே ....... ஆத்மத்*
*தீரம் பொலிந்திடவே (ஈசன்)*

*கல்விக் கதிர்விரிந்தே ....... புதுக்*
*காலை யழகினைப் போல்*
*மல்கிக் கலைநிலவ ....... இந்த*
*மாநிலம் மகிழ்வுறவே*
*நல்ல நடையுடனே ....... உண்மை*
*நட்பு வளர்ந்திடவே*
*செல்வத் தொழிற் புலமை ....... பெற்றுத்*
*தேசம் உயர்ந்திடவே (ஈசன்)*

## 69. தியானம்

*மோனங்கூடித் தியானம் செய்தோம்*
*ஞானம் பொழிவாய் வானென விரிந்தாய்*
*தூயா, பரமா தூய வுளத்தே*
*நேயங் கூடி நிலவிடு மொன்றே !*
*சிந்தனை நீயே செய்கையு நீயே,*
*வந்தனை செய்யும் மனதுறு தேனே*
*பக்தியு முக்தியும் சக்தியு மீவாய்,*
*சுத்த சுதந்தர சமரசச் சுடரே !*

## 70. மங்களம்

*மங்களம் பாடுவோம் பாப்பா ....... இந்த*
*மாநிலம் தேனினப் பூப்போல்,*

*திங்களும் சூரியனும் போல் ....... என்றும்*
*சேமமாய் வாழிய என்போம் !*

*வஞ்சனை சூதுபொய் யின்றி ....... கொலை*
*வாளின் கொடூரங்க ளின்றி*
*நஞ்சப் பொறாமை களின்றி ....... மிக*
*நல்லவராக நாம் வாழ்வோம்.*

*அண்டை அயலவர் யாரும் ....... உள்*
*ளன்புடன் கூடிக்குலாவக்*
*கொண்டு கொடுத்து மகிழ்வோம் .......*
*குழந்தை யரசை நடுவோம்.*

*எங்குமே நம்முயிர் பார்ப்போம் ....... நாம்*
*எல்லார்க்கும் நன்மை நினைப்போம்.*
*பொங்குக பூரண னருளே ....... என்று*
*போற்றிப் புனிதராய் வாழ்வோம்.*

## 71. பிள்ளைப் பருவத்தில்

*பிள்ளைப் பருவத்திலே ....... நான்*
*பெரிய கனவு கண்டேன்*
*உள்ள முயர்ந்திடவே ....... நான்*
*உலகினில் உயர்ந்தேன்.*
*பேசியது கவிதை ....... இசை*
*பிறந்து வளர்ந்ததையா.*
*தங்கமணிச் சிரிப்பில் ....... இன்பந்*
*தாவி வருகையிலே*
*பொங்கு மொரு கவிதை ....... அதுவே*
*புதிய வாழ் வமுதாம்.*
*நாடக மேடையிலே ....... நான்*
*நடித்த ஷேக்ஸ்பியரே*
*பாடக வாழ்வினிலே ....... காட்சிப்*
*படலமாகிடுமே !*

## 72. ஆடும் குழந்தையிலே

*ஆடுங்குழந்தையிலே ....... கண்ணன்*
*ஆடிவரக் கண்டேன்*
*ஓடுங் குழந்தையிலே ....... முருகன்*
*ஓடிவரக் கண்டேன்*
*பாடுங் குழந்தையிலே ....... கலைமகள்*
*பண்ணிசைக்கக் கண்டேன்*

*தேடும் பரம்பொருளே ....... மழலைச்*
*சிரிப்பில் விளங்கிடுமே*
*மாசற்ற வுள்ளத்திலே ....... திரு*
*வாசகம் பேசுதம்மா*
*ஆசைச் சிறுவரிடம் ....... சுத்தசக்தி*
*அருளொளி வீசுதம்மா !*

*சாரணர் கூடாரம் ....... தன்னிலொரு*
*சக்தி நிலவுதம்மா*
*ஆரண வேதாந்தம் ....... பொதுநல*
*அன்பில் வளருதம்மா !*

## 73. தாய் நிலமே

*மோகனம்]* *[ஆதிதாளம்*

*ப. தாய் நிலமே வணக்கம் ....... எமக்குத்*
*தந்தருளாய் பலமே*

*அ. சேய்களெல்லாம் இங்கே*
*சேர்ந்துன்பணி செய்வோம்*
*திருவும் கலையும் திறமும் தருவாய் (தா)*

*ச. பயிர்களும் பசுக்களும் பயனுள்ள தொழில்களும்*
*இயல்வளச் செழுமையும் இன்பமும் பெருகிட*
*உயிர்வளம் பெருகவே ஊர்வளம் பெருகவே*
*உலகு நலமுற உழைத்துப் பிழைக்கவே (தா)*

## 74. அறிவு வளர

*அறிவு வளர வேண்டும் ....... தினம்*
*ஆற்றல் பெருகவேண்டும்*
*திறமை ஓங்கவேண்டும் ....... நான்*
*தீரனாக வேண்டும்*
*அன்பு செய்யவேண்டும் ....... நல்ல*
*அறத்தைக் காக்கவேண்டும் ....... வீரப்*
*பண்பு பரவ வேண்டும் ....... இந்தப்*
*பாருக் குதவவேண்டும்*
*தன்னுறுதி வேண்டும் ....... மனச்*
*சாட்சி மகிழ வேண்டும்*
*மன்னுயிருக் குயிராம் தெய்வ*
*மாண்பு நிலவ வேண்டும்.*

## 75. ஊருக்கு

*ஊருக்கு நல்லவனாகியே*
*உலகம் புகழ்ந்திட வாழுவேன்*
*பாருக் கெல்லாம் அன்பு கூடியே*
*பாரத ரத்தின மாகுவேன்*
*நாடு நிறபேத மில்லையே ....... இந்த*
*ஞாலம் ஒருகுலமல்லவோ ?*
*ஓடும் அருவிகள் யாவையும்*
*ஒன்றிக் கலப்பதோர் ஆழியே*
*சிக்காக்கோ மேடையிலேறியே*
*திருக்குறளின்பத்தைச் சொல்லுவேன்*
*பக்குவமாகவே மாஸ்கோவில்*
*பகவத் கீதையை விளக்குவேன்*

*மெக்காவிலே திருவாசகம் ....... லண்டன்*
*வீதியில் அப்பர் தேவாரங்கள்*
*திக்குத்திகந்தங் கூத்தாடவே*
*திருப்புகழ் பாடிக் கூத்தாடுவேன்*

## 76. எல்லாரும்

*எல்லாரும் என்னவர் என்னுவேன்*
*எல்லாமும் ஆன்மப் பொதுவென்பேன்*
*பொல்லாத சாதிமத வெறி ....... போகப்*
*போர் செய்யும் வீரனைப் பாரம்மா !*
*சாமியும் சீவனும் கூடியே*
*சமரச மாயினி வாழுமே*
*பூமியும் வானமும் கூடியே*
*பொதுநலப் புண்ணியம் சூழுமே*
*தீங்கனிச் சோலை யழகிலே*
*தெய்வமின் சாரம் பொழியுமே*
*மாங்கனி வாய்க் குயிலோடு நான்*
*மங்கல மாமறை பாடுவேன்.*
*உள்ளமும் உள்ளமும் கூடியே ....... சம*
*யோக ஒருமையை நாடினால்*
*வெள்ள மின்சாரம் போல் ....... சக்தியின்*
*வேகம் விளங்கிடும் பாரம்மா !*

## 77. பருவ காலமாக

*பருவ காலமாக ....... அவன்*
*பவனிவருகின்றான்*
*அருவமான இறைவன் ....... அம்மா*
*அகிலவுலக மானான்.*
*மேகத்திரையைப் பிளந்தே ....... அவன்*
*மின்னடம் புரிவான் ....... கால*
*வேகத் தேரிலேறி ....... என்*
*வீட்டுக்கும் வருவான்.*
*ஜீவநாதக் குழலில் ....... அவன்*
*தேவகான மாவான்*
*தாவியின்பக் கடலில் ....... முத்துத்*
*தாண்டவஞ் செய் ஒருவன்*
*அள்ளி யள்ளிப் பாட்டை ....... மலை*
*யருவியாகப் பொழிவான்*
*உள்ளமான ஊற்றில் ....... அவன்*
*ஓம் என்றாடி மகிழ்வான்.*

## 78. மலர் கொய்வோம்

*மதுமலர் கொய்வோம் மங்கலமான*
*வாழ்க்கை வனத்தினிலே ;*
*புதுவசந்தத்துடன் பூங்குழலிசைக்கப்*
*பொன்வண் டூதிடவே !*

*மல்லிகை ரோஜா மனோரஞ்சிதம்*
*மகிழர விந்தமுடன்*
*வில்வம் துளசி பச்சை பவளம்*
*விளங்கும் மணமலரே !*
*காதல் வனத்தில் கண்ணன் ஒளிவான்*
*கவனமாய் வாருங்கள் ;*
*மாதவி மாலை சூட்டிப் பணிவோம்*
*வரங்கள் பெறலாமே.*
*கொத்துக் கொத்தாய்க் குலுங்கும் மலரைக்*
*கோத்துக் குமரேசன்*
*சித்தங்குளிரத் திருவணிசெய்வோம்*
*ஜெய ஓம் என்றிசைப்போம் !*

## 79. அழகின் கனவே

*அழகின் கனவே கவிதை*
*அமுதச் சுவையே கவிதை*
*பழமும் பூவுங் கவிதை*
*பாடுங் குயிலுங் கவிதை*
*காற்றும் நிலவுங் கவிதை*
*காடும் மலையுங் கவிதை*
*ஆற்றின் பாட்டும் கவிதை*
*ஆழிக் கூத்துங் கவிதை*
*பருவத் திருவுங் கவிதை*
*பரிதிச் சுடருங் கவிதை*
*உருவும் அருவும் எனவே*
*உலவும் அருளும் கவிதை*
*வானக் கூட்டிற் பேசும்*
*வாழ்வுக் கிளியும் கவிதை*
*ஞானக் குகையில் வளரும்*
*நானும் நீயுங் கவிதை !*

## 80. பொங்குதிரை

*பொங்குதிரை நடனமிடப்*
*புன்னகைக்கும் மதியே !*
*பூமியெல்லாம் ஒளிபரவப்*
*பொலியுமிளங் கதிரே !*
*மங்கலநன் மணம்பரவி*
*மகிழுகின்ற மலரே ;*
*மாங்கனியுண் டிசை மகிழும்*
*தீங்கனி வாய்க் குயிலே !*

*பாருயிரை வாழவைக்கப்*
*பாய்ந்துவரும் காற்றே ;*
*பசும் பயிரை வளர்த்திடவே*
*பாடிவரும் ஊற்றே !*
*ஆருயிரைத் தாங்கி வளர்*

அன்னை மனத் தன்பே ;
அருள் பொழியும் வானே ....... என்
ஆண்டவனென் றறிவீர் !

## 81. பாடுபட்டு

பாடுபட்டுத் தேன் சேர்த்துப்
பகுத்துண்ணும் வண்டே ,
பாட்டிசைக்கும் பறவைகளா,
பல்லாண்டு வாழீர் !
ஏடெழுதிக் கலைவளர்க்கும்
எழிலாளர் வாழ்க !
ஃந்துவக்கும் இன்பமதே
இன்பமென்பார் வாழ்க !
சேயைவளர் தாயமுதே,
தெண்டனிட்டேன் உன்னை
செல்வமுடன் கல்வி வளர்
தெய்வீகக் குருவே !
தேய மான்ம நேயமுறத்
தீங்கவிச் சொல் லரசே,
தெய்வாம்ச மாகவும்மைத்
தெண்டனிட்டேன் வாழீர் !

## 82. வானத்தை

வானத்தைக் கூடாரங் கட்டி
வைர மணிமலர் சூட்டி
ஞானக் கதிர் விளக்கேற்றி, இந்த
ஞாலத்தரங்கை யமைத்தாள்.
பண்ணுடன் பாடும் அருவி
பானகத் தேனெனப் பாயக்
கண்குளிர் பச்சை வனத்தைக்
கலையமு தென்ன வளர்த்தாள் !
விண்ணமுதச் சுவையெல்லாம்
வீட்டினிற் கொண்டு தருவாள்
எண்ண எண்ண இனிப் பாகும் .......
இயற்கை யெந்தாயன்பு வாழ்க !

## 83. ஆடு ரோஜாவே

ஆடு ரோஜாவே ....... காலை அழகு ரோஜாவே
பாடுந்தென்றலுடன்....... மணம் ....... பரவும் ரோஜாவே
கடிய முள்ளிடையே ....... நீ கனிநகை புரிவாய்
கடிய முட்களெல்லாம் ....... உன்னைக்
காக்கும் வாட்கணமோ ?
உன்னைக் கிள்ளையிலே.......என் உயிர் நடுங்குதம்மா
வன்மன வுலகம்.......அழகை.......வாழ வொட்டாதோ !
அகங்குளிருதம்மா ....... என் அன்பு ரோஜாவே
முகங் கசங்காதே.......உன்னை முத்தங் கொஞ்சுகிறேன்!

## 84. கொலை மறுப்பு

கொலையும் புலையும் வேண்டாம் அண்ணமாரே
பலியும் பாபமும் வேண்டாம் அண்ணமாரே
உலகெலாம் கோயிலன்றோ அண்ணமாரே
உயிரெல்லாம் சாமியன்றோ அண்ணமாரே
கல்லுக்குக் கண்பிதுக்கி அண்ணமாரே
காளி கறுப்பனென்பீர் அண்ணமாரே
பூசை பலிகளெல்லாம் அண்ணமாரே
பூசாரி காசடியே அண்ணமாரே
மோசம் போகாதிருப்பீர் அண்ணமாரே
மூடப் பழக்க மிவை அண்ணமாரே
கூற்றுக்குப் பயப்படும் அண்ணமாரே
கொலைக்குப் பயப்படுவீர் அண்ணமாரே
நாற்றவுடலை யுண்ணல் அண்ணமாரே
நல்ல பகுத்தறிவோ அண்ணமாரே
ஆட்டை யறுத்த பாவம் அண்ணமாரே
ஆளை அறுக்குதையா அண்ணமாரே
மாட்டை வதைத்த பாவம் அண்ணமாரே
மனிதரை வாட்டுதையா அண்ணமாரே
புன்புலா லுண்ணுவதே அண்ணமாரே
போராய் வளருதையா அண்ணமாரே
அன்பு மனிதர் குணம் அண்ணமாரே
அஹிம்ஸையே நாகரிகம் அண்ணமாரே

## 85. வெண்ணிலாவே

வெண்மதியே கண்குளிர வாவா
விண்ணமுத வெள்ளமென்ன வாவா
தண்ணிலாவை வீசி வீசி வாவா
தாய்மகிழச் சேய்மகிழ வாவா.
வன்னமணி வானத்திலே வாவா
மாந்தரெல்லாம் மனமகிழ வாவா
அன்னமணிப் படகெனவே வாவா
அல்லி மலர்ந்திடவே வாவா !
முல்லைமணத் தென்றலுடன் வாவா
முத்து முத்தாய்க் கதை சொல்ல வாவா
சொல்லமுதக் கவிதையென வாவா !
சுதந்தரமாய் வாழ நாங்கள் வாவா !

## 86. ஆடிப் பெருக்கு

ஆடிப் பெருக் கினிலே
ஆற்றங் கரையினிலே
கூடிக் குதூகலித்த
குஞ்சம்மா கால் வழுக்கி
வெள்ளத்திலே விழுந்து
வேகமாய்ப் போகையிலே
உள்ளந் துணிந்தே நான்
ஓடிக் குதித் திழுத்தேன்

*ஐயையோ என்றவர்கள்*
*யாரும் உதவவில்லை*
*வையக் கிளம்பி விட்டார்*
*வயிற்றி லடித்தழுதார்.*
*அள்ளிக் கரை சேர்த்தேன்*
*ஆசிகள் கூறி நின்றார்*
*துள்ளித் துணிந்துதவும்*
*தோழமையே வாழியென்போம்.*

## 87. அருவி மழை

*அருவி மழையினிலே*
*அலைந்ததோர் பேய்க் குரங்கு*
*குருவி தன்குஞ்சுடனே ....... வாழும்*
*கூட்டிற் புகுந்ததுவே*
*கை காலுனக் கில்லையா ?*
*கதிர் வீசுங் காலையிலே...*
*துய்ய குடிலமைத்தே ....... ஏன்*
*சுகமாயிருக்கவில்லை ?*
*என்றக் குருவி சொல்ல*
*எனக்கா நீ புத்தி சொன்னாய்*
*கொன்றிடு வேன் என்றே ....... குரங்கு*
*கூட்டை கலைத்ததுவே !*
*பொல்லாக் குரங்கனையார்*
*புத்தி புகட்டிடினும்*
*நல்லார் சொல் கேளாது*
*நாசம் புரிவாரே !*

## 88. அம்மா

*அம்மா என்பேன் அள்ளி யணைவாள்*
*அம்மம் என்பேன் அமுதூட்டிடு வாள் !*
*மண்ணில் ஆடி மனைக்கு வருவேன்*
*கண்ணே என்று கழுவித் துடைப்பாள்.*
*அழகாய்ப் பின்னி ஆடை யுடுத்திப்*
*பழகிய கல்விப் பள்ளிக் கனுப்பிக்*
*கவலை போகக் கனவுகள் காணும்*
*அவளே தெய்வம் அன்னை சக்தி !*

## 89. வெள்ளிப்படகு

*வெள்ளிப் படகம்மா ....... மேலே*
*விண்மலர்ப் பொய்கையிலே*
*புள்ளுடனே பறந்தே ....... மனம்*
*போகத் துடிக்குதம்மா !*
*தட்டிலே தாம்பூலமோ ?*

சாந்தக் கலைமானோ ....... அதை
எட்டிப் பிடித்திடவே ....... தினம்
என் மனம் துள்ளுதம்மா !
ஆகாயப் பந்தலிலே
அன்னந் தவழுதுபார்
வாகான பொன்குடத்தில்
வழியுது பாலமுதே !
முத்துமணிப் பந்தல் ....... அங்கே
முறுவல் முகங்காட்டி
அத்தன் அழைக்கின்றான் ....... என்
ஆசை பறக்குதம்மா;

## 90. மானே மரகதமே !

மானே மரகதமே
மயிலே யிளங்குயிலே
தேனே திருமகளே
செம்பவளக் கொடியே !
விண்ணெல்லாம் பொன்னெழுத்தாம்
வேத விளக்க மம்மா !
கண்ணான கண்ணனங்கே
காட்டுங் குறிப்பினைப் பார் !
வானத்தி லேயிருந்தே
மலர்களைக் கொஞ்சியிங்கே
மோனை யெதுகை யின்றி
முழங்குங் கவிதையைக் கேள்
கவிதை சிறகடித்தே
ககனத்தில் ஏறிடுவோம் ;
புவிமீதில் அங்கிருந்தே
புது வாழ்வை நாட்டிடுவோம்

## 91. சின்னஞ் சிறு

சின்னஞ்சிறு வுடலாம் .......
செங்கனி வாயலகாம்
வன்னப் பசுஞ்சிறகாம்....... இரண்டு
மாய மணிவிழியாம் !
சன்னக் குறுங்காலாம் ....... கவலை
சற்றுமில்லா நடையாம்
சொன்னதைச் சொல்லிடுமாம் ....... களை
சொட்டும் கிளியழகே !
கொஞ்சுங் கிளியுடனே ....... நான்
கூடி வாழ்ந்து விட்டால்
பஞ்சமெனக் குண்டோ ....... மனப்
பாரமெனக் குண்டோ ?
வஞ்சமெனக் குண்டோ ....... வயிற்று
வாதை யெனக் குண்டோ ?
குஞ்சுக் கிரை கொடுத்தே ....... நானும்
கொழுங்கனி யுண்பேனே !

## 92. சிட்டு குருவி

*சிட்டுக் குருவியைப் போல் ....... ஒரு*
*சிக்கின்றி வாழேனோ ?*
*பட்டு நிலாவினிலே ....... ஜிவ்வெனப்*
*பறந்து போகேனோ ?*
*கட்டுகளையுதறிக் ....... குயிலுடன்*
*காவினிற் கூவேனோ ?*
*வட்டமிடுங் கருடன் ....... அதனுடன்*
*வானை யளாவேனோ ?*
*கொக்குத்திருக் கூட்டம் ....... விமானக்*
*கூட்டமெனப் பறக்கும் ....... அந்தத்*
*திக்கினிலென் மனமும் ....... எதையோ*
*தேடிப் பறக்குதம்மா*
*சக்கர வாகத்துடன் ....... மனம்*
*தாவத் துடிக்குதம்மா*
*அக்குப் பறவையுடன் ....... பறக்க*
*ஆசை யலையுதம்மா !*

## 93. அப்பா இல்லை புலி

*அன்பான நடிகன்தன் அருமைச் சேயை*
*அரவணைத்துக் கொஞ்சிடுவான் சேயும் ---கொஞ்சும்*
*துன்பான புலிமுகத்தைப் பூண்டத் தந்தை*
*துரத்தியுறு மிச்செய்த நடிப்பைக் கண்ட*
*பின்பு நீ தந்தையிலை புலியே என்று*
*பிள்ளைவெரு வுற்றழுதான் அதுபோல் மாந்தர்*
*வன்மனத்தின் குணதொந்த வேடத்தாலே*
*மாறுபடக் காண்கின்றோம் மாறாதான்மா*
*என்றும் நிலையது, எல்லாம் அறிவது*
*ஒன்றது பலவாம் உருபெயர் வேடம்.*

## 94. ஆளின் பெயரை

*ஆளின் பெயரை மதமாக்கி*
*அவரிவர் என்றே போராடி*
*வாளின் முனையில் அரசாக்கி*
*மனிதர் அமைதி கெட்டதுவே*
*கடவுள் ஒருவன் உண்டென்போம்*
*காணும் உலகம் ஒன்றென்போம்*
*உடலும் உயிரும் உள்மனமும்*
*உழைக்கும் பொதுமை வாழ்வென்போம்*
*அச்சம் இல்லை அன்புண்டு*
*ஆணவ மில்லை அருள் உண்டு*
*உச்சக் குரலை உயர்த்திடுவோம்*
*ஓம்ஜெயஓம்என முரசொலிப்போம்*
*நிமிர்ந்து செல் ! நேரே செல் !*
*நேசங் கொள் ! ஆவேசங் கொள் !*
*அமர்ந்து கேள் ! அறிந்து நடநட*

ஆன்மப் பொதுமை சமயோகம்
அதுவே இதயக் கடல் வேகம்.

## 95. கதவை பார்த்துக்கோ

கதவைப் பார்த்துக்கோ ....... என்று காவல் காரனைக்
கட்டளையிட்டுச் ....... செல்வன் காஞ்சி சென்றனன்
கதவைப் பார்த்தவன் கண்சுழன்றதுவே
கதவைப் பேர்த்துத் தன் குடிலிற்சாய்ந்தனன்
திருடர் பூந்தனர்; வீடு திருட்டுப் போனது
செல்வன் வந்தனன்சேவகன் செயல் ....... கண்டு
முரடா மூடமுட் டாளென்றடித்தனன்
கட்டளைப்படி ....... நான் ....... கதவைக்காத்தனன்
காத்தவுண்மைக்கு பரிசிது தானோ ....... என
முட்டாள் சேவகன் அட கதவென்றால் வீடு
முழுதுவதும் எனவே ....... இனி ....... உணர்வேன்
என்றானே

## 96. மயில் பாட்டு

வானத்தைப் பாரடியோ ....... மயிலே
மாமழை மேகமெல்லாம்
கான முரசடிக்க ....... மின்னல்
கால்வீசி யாடுதம்மா !
மோன வியப்புடனே ....... இயற்கை
முறுவலிக்கு தம்மா
ஆனந்தத் தோகை விரி ....... மயிலே
ஆடிக் களித்திடுவோம்.
அந்தியின் செந்தீயில் ....... மயிலே
அல்லி நகைப்பது பார்
சந்தனம் பூசு நிலா ....... வுடனே
தாவிடுந் தென்றலம்மா !
இந்திர வில்லேறி ....... நடுவோம்
ஏழுவர்ணக் கொடியே ....... மயிலே
சந்தத் திருப்புகழைப் பாடித்
தாண்டவ மாடிடுவோம் !

## 97. சந்திரத் தோணியிலே

சந்திரத் தோணியிலே ....... மின்னுந்
தாரகை யேரியிலே,
அந்தரம் ஓமொலிக்கச் ....... செல்வோம்
அருணச் செந்துறைக்கே ....... பின்னர்
சுந்தரக் காலையிலே ....... உலகைச்
சுற்றி யனுபவிப்போம்
விந்தைகள் எத்தனையோ ....... எல்லாம்
விளம்பச் சொல்லுமுண்டோ ?
வெள்ளி மலையினின்றே ....... திரு
வேங்கடத்தைப் பார்ப்போம்
தெள்ளிய மானசநீர் ....... குளித்துச்

*சிவகங்கை செல்வோம்.*
*துள்ளு மருவியுடன் ....... வேதத்*
*தொனி யெழுப்பிடுவோம்*
*ஒள்ளிய வானொலியில் ....... கதையை*
*உலகினுக் குரைப்போம்.*

## 98. பஞ்சவர்ணக் கிளி

*பஞ்ச வர்ணக் கிளியே ....... உனக்குப்*
*பழங்கள் கொண்டு வந்தேன் ;*
*கெஞ்சுகிறே னுன்னைக் ....... கிளியே*
*கிட்ட வந்து பேசாய்.*
*கொஞ்சிக் குலாவிடுவோம் ....... உன்னை நான்*
*கூண்டி லடைக்க வில்லை ;*
*அஞ்சிறை தாராயோ ....... கிளியே*
*அச்சமறப் பறப்போம்*
*நீல விதானத்திலே ....... ஸ்புட்*
*நிக்குடனே செல்வோம்*
*காலைப் பவளமலை ....... கண்டு*
*கதிரவன் ரதத்தில் ....... ஏறி*
*மாலை மதியழகில் ....... குளிப்போம் ;*
*மல்லிகைத் தென்றலுடன்*
*வேலைக்கட லிசைக்க ....... முத்து*
*விண்ணகங் கண்வளர்வோம் !*

## 99. வன்ன மணிவானம்

*வன்ன மணி வானம் ....... பாராய்*
*மாநிலத் தோகையதே*
*மின்னிடுந் தாரகைகள் ....... அதிலே*
*மிளிரும் கண்களம்மா !*
*சின்னக் குருவியினம் ....... பறக்கும்*
*சிங்கார வீணையம்மா*
*உன்னதத் தில்லை நடம் ....... அது நம்*
*உள்ளத் திருநடமே*
*சிந்தாமணி யணியே ....... உனக்குச்*
*செங்கதிர் வட்டமெல்லாம்*
*சந்தமிசை யருவி ....... உனக்கே*
*தாள மிசைக்குதம்மா !*
*இந்த வுலகமெல்லாம் ....... கலை*
*யின்ப மேடையம்மா !*
*தந்திமித் தோமெனவே ....... மயிலே*
*தாவிக் குதித்திடுவோம்.*

## 100. பாட்டுப் பாட

*பறவை பாட்டைக்*
*கேட்டேன் ....... நானும்*
*பாட்டு பாடக் கற்றேன் ....... அது*
*சிறகை வீசி பறக்கும் ....... போதே*

திருநடனங்கள் கற்றேன்.
என்ன ராக தாளம் ....... என்றே
ஏதும் யானுமறியேன் ;
வன்னக் கோகிலம் போல் ....... நானும்
வந்த பாட்டைச் சொல்வேன்.
மலையருவி யாழில் ....... மந்த
மாருதக் குழலில்
கலை சிறந்த பாட்டு ....... வந்தென்
காதை கொஞ்சுதம்மா
பட்டுக் கற்றுக்கொண்டேன் ....... அம்மா
பாயும் வெள்ளம் போலே.
காட்டுப் பட்சிபோலே ....... நானும்
கவிகள் பாடுகின்றேன் !

## 101. பூத்த மலர்க் காலை

பூத்தமலர்க் காலையைப்போல்
புன்னகைப்போமே ....... அன்பு
கோத்தமலர் மாலையைப்போல்
குலவி வாழ்வோமே.
ஓங்கிவளர் கனிமரம்போல்
உதவி செய்வோமே ....... மழை
தாங்கிவளர் மாநிலம்போல்
தயை புரிவோமே.
உண்டுடுத்துக் குடியிருக்க
உழைத்திடுவோமே ....... கலை
வண்டெனவே ஓமிசைத்து
வளம் பெறுவோமே.
மலையருவி பாடிவரும்
மறையுணர்வோமே ....... தெய்வக்
கலையருவி யாகவுயிர்
கருதிடு வோமே.

## 102. உச்சமா மலையினின்றே

உச்சமாமலை யினின்றே
ஊறிவந்தேனே ....... என்
பச்சைக் குழந்தை பால்குடிக்கப்
பாய்ந்து வந்தேனே !
மேடுபள்ளந் தாவிக் குவித்து
விரைந்து வந்தேனே
காடுங்கரையுங் கவலையின்றிக்
கடந்து வந்தேனே !
வெள்ளமாகப் பெருகிப் பெருகி
வேட்கை தீரவே .......
உள்ளமட்டும் உலகிற்குதவ
உருகி வந்தேனே ....... பனி
உருகி வந்தேனே

*பரம் பொருளைப் பண்ணுடனே*
*பாடி வந்தேனே*
*பரந்த கடலிற் கலந்து மகிழப்*
*பணிந்து வந்தேனே !*

## 103. நீல வானமென்

*நீலவானகமென் பாட்டன் ....... காற்று*
*நீளக்கதை சொல்லும் பாட்டி*
*ஞாலவியற்கை யென்னம்மா ....... ஒளிர்*
*ஞாயிறெனக் கறிவுத் தந்தை.*
*கோலமாமதியென் மாமா ....... கடல்*
*குதித்துப் பாடுகின்ற மாமி*
*ஓலமிட்டுயிர்களாடும் ....... இந்த*
*வுலக நாடகமென் வாழ்வே.*

*கல்லும் புல்லுமென் படுக்கை....... ஓடுங்*
*காலம் எனது விசை வண்டி .......*
*இல்லம் எனக்குலக மெல்லாம் ....... அதில்*
*எல்லா வுயிர்களுமென் சுற்றம் ;*
*நல்லமழையருவி வீணை ....... கனி*
*நல்கும் சோலை மடப்பள்ளி ....... வான*
*வில்லும் எனக்கிசைந்த பாலம் .......விண்*
*மீன்கள் எனது மணிப் பூண்கள் !*

## 104. பூனையும் புலியும்

*பூனை எனக்கினிய தங்கை ....... கோபப்*
*புலியும் வலுமுரட்டுத் தம்பி*
*யானை எனக்கு முத்தண்ணா ....... மாந்தர்*
*யாரும் எனக் கினிய தோழர் ;*
*சேனை கொண்டுவரும் பகையும் ....... ஒரு*
*திருவிளையாட்டி னெதிராளி*
*ஞான நூலு மனச் சாட்சி ....... பொது*
*நலமே எனக்கினிய சமயம்.*
*சோலைக் கனிகளென் உணவே ....... தீஞ்*
*சுனைகள் யான் பருகு நீரே*
*பாலைத் தரும் பசுவென் தோழி ....... மணம்*
*பரவுங் காற்றெனது தோழன் ;*
*வேலைக் கடலருவி மழையே ....... என்*
*வீறுமிகுந்த இசைக் கருவி*
*காலமெல்லாங் கவிபாடி ....... இன்பக்*
*கடவுளைக் கூடுவதென் வாழ்வே ;*

## 105. அள்ள அள்ள

*அள்ள அள்ள அளவிலாத*
*செல்வ முள்ளதே.*
*உள்ளம் பொங்க ஊறி ஓடும்*
*ஓடை யுள்ளதே*
*வெள்ள மாக அன்பு நெஞ்சில்*
*விம்மிப் பாயுதே*
*எள்ளிக் குமைத்துவிசனப் பொய்யை*
*இன்பம் வாழ்வென்போம் !*
*அல்லலில்லை அச்சமில்லை*
*அவனி மீதிலே*
*தொல்லையில்லை தொத்தடிமைத்*
*துயர மில்லையே.*
*அலைகடந்த ஆழிபோல*
*அமைதி கூடுவோம்*
*கலைவிரிந்த கதிரவன் போல்*
*காட்சி நாடுவோம்.*

## 106. மாநில வீடு

*மாநில வீடு முண்டு ....... மனமே*
*மன்னுயிர்ச் சுற்றமுண்டு,*
*நானெனுந் தோழனுண்டு ....... இங்கே*
*நல்லன யாவுமுண்டு.*
*வானப் பருவங்கள் போல் ....... கலை*
*வாழ்வை யுகந்திடுவோம்*
*கானகப் புள்ளினம் போல் ....... மனமே*
*கவலையற் றேயிருப்போம்.*
*போனது வந்ததெல்லாம் ....... காலப்*

*புரட்சி யென்றறிவோம்,*
*தேனின வண்டுகள் போல் ....... மனமே*
*தீந்தமிழ் பாடிடுவோம் !*
*ஏனினிக் கவலை ....... மனமே*
*ஏதுக்குத் துக்கம் ?*
*ஏனினி மயக்கம் ....... உள்ளே*
*இன்பக் கடவுளுண்டு !*

## 107. ஆடல் பாடல்

*ஆடல் பாடல் அழகு .......*
*அணிமணி குலுங்க வாழ்வோம்*
*நாடக மிந்த வாழ்வே ....... அதில்*
*நவரஸ நடனம் புரிவோம்*
*குழலும் யாழும் முழவும்*
*குயிலும் மயிலும் கிளியும்*
*பழகும் பண்பாட்டுடனே*
*பாரில் ஒன்றாய்ச் சேர்வோம் !*

*உள்ளம் உயர வாழ்வோம்*
*உண்மை வளர வாழ்வோம்.*
*வள்ளல் அருவி போலே*
*வாழ்வோம் அன்பே சூழ்வோம் !*

## 108. அருள்வாய்

*அருள்வாய் பரமா அன்பின் வரமே.*
*பொருளும் அறமும் புலமைக் கதிரும் ;*
*வான்போல் அறிவும் மழைபோல் அருளும் ;*
*கான் போல் அழகும் கனிபோல் மொழியும்,*
*மலைபோல் மாண்பும் மலர் போல் நகையும்;*
*அலைகடல் நிறைவும் அருவிப் பாட்டும்,*
*வீரத் திண்பும் விழுமிய பண்பும்*
*பாராலயத்தின் பணியும் பயனும்* (அரு)

## 109. ஆவியுருகும்

*ஆவியுருகும் காவியம் போல்*
*ஆருயிர் வாழ்வே*
*பாவினிமை நவரசத்தின்*
*பான்மை யாகுமே,*
*இன்பமுண்டு துன்பமுண்டு*
*இயற்கை வாழ்விலே*
*அன்புமுண்டு பகையுமுண்டு*
*அகமும் புறமுமே.*
*இனிமையான அனுபவங்கள்*
*எண்ணிலாதன !*
*கனிமதுரக் கலைகுலுங்கும்*
*காட்சி யுலகிலே.*
*ஆடக வுலகினிலே*
*அதிசயமான*
*நாடகத்தில் நமது பங்கை*
*நடித்துச் செல்லுவோம் !*

## 110. பூரணம்

*பூரணம் பொலிகவே*
*புதிய வாழ்வு வாழவே*
*காரணிந்த வானெனக்*
*கருணை யன்பு சூழவே* (பூர)
*கள்ள மற்ற வுள்ளமும்,*

*கலக்க மற்ற சிந்தையும்,*
*கொள்ளை யற்ற செல்வமும்*
*கொடுத்தருள் பரமனே !* (பூர)
*இரும்பு போல மேனியும்,*
*இரக்க முள்ள நெஞ்சமும்,*

சுரும்பு போல் முயற்சியும்
சுரண்ட லற்ற நேர்மையும் (பூர)
வறுமையற்ற வண்மையும்
வளமையுற்ற சீர்மையும்
சிறுமையற்ற சிந்தையும்
சிறக்கச் செய், இறைவனே ! (பூர)

## 111. வெற்றி

வெற்றி யென்று முன்செல்,
வீரமுரசு கொட்டி ....... உலகை
ஒற்றுமைக்குக் கூவு ....... புகழின்
உச்சிமீது தாவு !
தணலும் சோதனைக்குள் ....... சொக்கத்
தங்கம் போல மின்னு,
கணமும் வீணிலாமல் ....... நல்ல
காரியத்தைப் பண்ணு !
இழந்த நாளை யெண்ணி ....... நீ
ஏங்கிடாது முன்செல்
குழந்தையின்பம் பாடு ....... வாழ்வாய்
கொற்ற மோங்க நீடு !
மனிதன் செய்த வியனை ....... ஒரு
மனிதன் செய்ய முடியும்,
புனிதமான முயற்சி ....... யெல்லாம்
பூரணத்தை யடையும் !

## 112. பொதுநலப் பணியே

பொது நலப்பணியே ....... நமது
பூசை நிவேதனமாம்
முது நலமெல்லாம் ....... ஒரு
மொழியினில் அடங்கும்.
அது நல்லன்புசெயல் ....... தெய்வ
ஆலயமா முலகில்
புது மலர் வனம் போல் ....... மணம்
பொலிய வாழ்ந்திடுவோம் !
மோனக் கதிரவன்போல் ....... அலை
மோதுங் கடலினைப் போல்
வான மழையினைப் போல் ....... மலை
வளர் அருவியைப் போல்,
தேனின வண்டினைப் போல் ....... தெய்வத்
தீந்தமிழ்க் காவியம் போல்
மானிடர் நானிலத்தில்....... கூடி
வாழ்வாங்கு வாழ்ந்திடுவோம் !

## 113. எல்லாரும்

*எல்லாரும் வாழ்கவே !*
*எல்லார்க்கும் வாழ்கவே !*
*இன்பமே சூழ்கவே ;*
*இன்னல்கள் வீழ்கவே ;*
*அன்பு பெருகவே,*
*அமைதி நிலவவே !*
*நண்பு வளர்கவே*
*ஞாலம் சிறக்கவே !*
*கொஞ்சும் குழந்தையின்*
*நெஞ்சம் பொலிகவே !*
*வஞ்ச மில்லாமலே*
*வாழ்வோம் உலகிலே !*

******